வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்




Email : news@eelanadu.lk மலர் : 06 19.10.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 292 பக்கங்கள் : 16

# அரசியல்வாதிகளின் தன்னகம்பாவம் நீங்காமல் தமிழ்த் தேசிய அரசியலுக்கு எதிர்காலம் இல்லை!

## உளநல வைத்திய நிபுணர் சி.சிவதாஸ் கருத்து



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 19

**தமிழ் அரசியல்வாதிகளின் தன்னகம்பாவம் நீங்கும் வரை தமிழ்த் தேசிய அரசியல் என்பதற்கு எதிர்காலமே இல்லை என்று உளநல வைத்திய நிபுணர் சி. சிவதாஸ் தெரிவித்துள்ளார்.**

மூத்த பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதித் தொகுத்த "தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்" என்ற நூலின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே உளநல வைத்திய நிபுணர் சி. சிவதாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நூலின் வெளியீட்டு விழா நேற்று சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில், சட்டத்தரணி சோ. தேவராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம உரையாளர்களில் ஒருவராகக் கலந்துகொண்டு உரையாற்றிய உளநல வைத்திய நிபுணர் சி. சிவதாஸ், அங்கு மேலும் குறிப்பிடுகையில்-

தமிழ் அரசியல் தலைவர்களிடம் காணப்படும் தன்னகம்பாவமே இன்று வரை எமக்கு தீர்வொன்று கிடைக்காததற்குக் காரணமாகும். அரசியல்வாதிகள் என்றில்லை, எங்கள் அனைவரிடமும் தன்னகம்பாவமே தலைதூக்கிக் காணப்படுகிறது.


பொதுவாக நாங்கள் எல்லோருமே கறுப்பு - வெள்ளை மனநிலையிலேயே இருக்கிறோம். கறுப்புக்கும், வெள்ளைக்கும் இடையில் 'கிறே' நிறமென்று ஒன்று இருப்பதை யாருமே ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இல்லை. அதாவது விட்டுக்கொடுப்பு - இணங்கிப்போதல் மனநிலை என்பது யாரிடமும் அறவே இல்லை.

இன்றைய நிலையில் - போருக்குப் பின்னரான இந்தக் காலப்பகுதியில் தமிழர்களில்

15

# போதைக் கும்பல்களின் செயல்பாடுகள் அரசியலுடன் பின்னிப் பிணைந்துள்ளன!

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க



கொழும்பு, ஒக். 19

போதைப்பொருள் கடத்தல் மற்றும் குற்றக் கும்பல்களின் செயற்பாடுகள், அரசியலுடன் பின்னிப் பிணைந்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஒழுக்கம் மற்றும் பொறுப்பு என்பவற்றுடன் கூடிய அரச சேவை நாட்டிற்கு தேவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை விமானப் படைக்கு ஜனாதிபதி வர்ண விருது வழங்கல் மற்றும் கடெட்

15

# பிள்ளைகளை இலக்காக வைத்து போதைப்பொருள் வலைப்பின்னல்

## வடக்கு மாகாண ஆளுநர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 19

உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்கவேண்டும். பிள்ளைகளை இலக்கு வைத்து வலைப்பின்னல் உருவாக்கப்படுகின்றது. அதை உடைத்தெறிந்து அவர்களுக்கு பாதுகாப்பான சூழலை நாம் உருவாக்கிக் கொடுக்கவேண்டும். பிள்ளைகள் மீதான முதலீடு என்பது சிறப்பான எதிர்கால நாட்டுக்கான அடித்தளமாகும். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள்

15

# போதைப்பொருளை கட்டுப்படுத்துவதற்கு மீனவர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்!

## அமைச்சர் இ.சந்திரசேகர் வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஒக். 19

இலங்கைக்கு கடல் வழியாக பெருந்தொகையான போதைப்பொருள் கடத்தப்படும் நிலையில், போதைப்பொருளை கட்டுப்படுத்த, கடற்றொழிலாளர்களும் பாதுகாப்பு தரப்பினருக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் வலியுறுத்தியுள்ளார்.

15

# ஐ.எஸ்.ஐ.எஸ். உட்பட்ட அமைப்புக்களுக்கு உதவிய இலங்கையர் குறித்து விசாரணை

கொழும்பு, ஒக். 19

ஐ.எஸ்.ஐ.எஸ் மற்றும் அல்கொய்டா அமைப்புகளை இலங்கையில் வியாபிப்பதற்கு பங்களித்த மற்றும் நிதியுதவிகளை வழங்கியதாக சந்தேகிக்கப்படும் 15 சந்தேக நபர்கள் தொடர்பில் பயங்கரவாத விசாரணை பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அதன்படி, கொழும்பு மேலதிக நீதிவான் லஹிரு சில்வா முன்னிலையில் நேற்று முன் தினம் இதற்கான 15 முறைப்பாடுகளை பயங்கரவாத விசாரணைப் பிரிவு தாக்கல் செய்துள்ளது.

குறித்த சந்தேகநபர்களுள் ஒருசிலர் ஈஸ்டர் தாக்குதலுக்கு உடந்தையாக இருந்தமை தொடர்பில் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பயங்கரவாத விசாரணை பிரிவு தெரிவித்துள்ளது.

15

# ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியின் உயர்மட்ட கூட்டம் நேற்று வவுனியாவில்!

வவுனியா, ஒக். 19

எதிர்வரும் மாகாணசபை தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்பது தொடர்பாக ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியின் உயர்மட்டக்கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று மாலை இடம்பெற்றது.

இந்த கூட்டத்தில் ரெலோ தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான த. சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன்,சிவசக்தி ஆனந்தன், மு.சந்திரகுமார் கூட்டணியின் செயலாளர் நா. ரட்ணலிங்கம் ,ஜனநாயக போராளிகள் கட்சியின் பேச்சாளர் க. துளசி,உட்படபலர் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தில் எதிர்வரும் மாகாணசபை தேர் தலை எப்படி எதிர்கொள்வது

15

# செவ்வந்தியிடம் 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை

கொழும்பு, ஒக். 19

நேபாளத்தில் கைதாகிய இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட அறுவரையும் மேலும் 90 நாட்களுக்குத் தடுத்து வைத்து விசாரணை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இஷாரா உள்ளிட்ட நால்வர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். மற்றைய இருவரும் பேலியகொடை குற்றப்புலனாய்வுப் பிரிவிலும் மேற்கு குற்றத் தடுப்புப் பிரிவிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# தமிழின அரசாட்சி சின்னமாக 'நல்லூர் சங்கிலியன் பூங்கா'

## ஆளுநரிடம் சிவஞானம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 19

தமிழின அரசாட்சியின் சின்னமாக 'நல்லூர் சங்கிலியன் பூங்கா' எனும் பெயரில் எம்மின வரலாற்றை வெளிப்படுத்திக் கொண்டு தொடர்வதற்கான திடமான நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் வடக்கு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அனுப்பி வைத்த கடிதத்திலேயே மேற்கண்டவாறு

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பந்தத்தை மீறும் வகையில் சங்கு கட்சி செயல்படுகின்றது

## அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்

யாழ்ப்பாணம், ஒக். 19

"ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி (சங்கு சின்ன கட்சி) பதவிகளைக் கைப்பற்றுவதற்காக எமது உதவிகளை பெற்று விட்டு, செய்த ஒப்பந்தங்களை மீறுகின்ற வகையில் இப்போது 13 ஆம் திருத்தம் சம்பந்தமாக கூட்டங்கள் வைப்பது தாங்களாக ஒப்பந்தத்தில் இருந்து விலகும் செயலாகத்தான் நாங்கள் பார்க்கின்றோம்." - இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அவர் நேற்று முன்தினம் ஊடகங்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "கூட்டத்தை நடத்தியது தமிழ் கட்சிகள் அல்ல. அது, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியே நடத்தியது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிகள்கூடி மாகாண சபை தேர்தலை வைக்க வேண்டும் என்பது தொடர்பிலும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பிலும் கதைத்துள்ளனர்.

நாங்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் மிகத் தெளிவாக ஒற்றையாட்சி முறைமைக்குள் தமிழ் அரசியல் நடத்த அறவே இடமில்லை என்பதனை எழுத்து மூலமாக தெளிவாக வலியுத்தி வந்துள்ளோம். அது மட்டுமன்றி, 13 ஆம் திருத்தம் இறுதித் தீர்வும் அல்ல, ஏக்கிய இராச்சிய யோசனை நிராகரிக்கப்பட வேண்டும் என்ற இரண்டும் ஒப்பந்தத்தில் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு இணங்கி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் அனைவரும் ஒப்பமிட்டனர். அதற்குப் பிறகு உள்ளூராட்சி சபையில் எங்களோடு இணைந்து, நாங்கள் விட்டுக் கொடுப்புகளைச் செய்து அவர்களுக்குப் பதவிகளைக் கொடுத்த பின்பு நன்மைகளை பெற்ற பிறகு இப்போது ஒப்பந்தங்களை மீறுகின்ற வகையில் 13 ஆம் திருத்தம் சம்பந்தமாக கூட்டங்களை வைக்கின்றனர். இதனை தாங்களாகவே ஒப்பந்தத்தில் இருந்து விலகும் செயலாகத்தான் நாங்கள் பார்க்கின்றோம் - என்றார். (ஐ)

# சுகாதாரமற்ற முறையில் பன்றி வளர்த்தவர்மீது சட்டநடவடிக்கை

முல்லைத்தீவு, ஒக். 19


சுகாதாரமற்ற முறையில் பன்றிகளை வளர்த்த நபருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - கோம்பாவிலை சேர்ந்த நபர் ஒருவருக்கு எதிராகவே இவ்வாறு சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பன்றி வளர்க்கப்படும் இடத்தை நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு சுகாதார பரிசோதகர்கள் சென்று பார்வையிட்டனர். அப்போது, பத்துக்கும் மேற்பட்ட பன்றிகள் வீட்டு வளவில் வளர்க்கப்பட்டுள்ளமை தெரிய வந்தது.

அவை சுகாதாரமற்ற முறையில் வளர்க்கப்பட்டமையால் அந்தப் பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசியமை அவதானிக்கப்பட்டது.

இதையடுத்து, பன்றி வளர்ப்பாளருக்கு எதிராக முல்லைத்



தீவு நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. பன்றி வளர்ப்பாளரை எதிர்வரும் 24ஆம் திகதி நீதிமன்றில் முற்பட நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த இசை நிகழ்ச்சி!



வடமராட்சி, ஒக். 19

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறும் வாராந்த நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையும் நடைபெற்றது.

ஆச்சிரமத்தின் முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர் திருமதி யாழினி பாலசந்திரனின் இறை இசை பாடல்களை பாடினார்.

இசைக்கலைமணி நடேசு செல்வச்சந்திரன் - ஆர்மோனியம், வித்துவான் மகேந்திரம் பிரபா - தபேலா, வித்துவான் வரதன் பானு - ஒக்ரோபாட், பா. ஆரபி- சுருதி அணிசெய் கலைஞர்களாக பங்கேற்றனர்.

பன்னாலை கணேசா அறநெறி பாடசாலைக்கு இசை கருவிகளை திருத்துவதற்காக 26 ஆயிரம் ரூபாய் நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஏராளமானவர்கள் பங்கேற்றனர். (ஐ-02-08)

# மாகாண சபைகள் தேர்தலுக்காக சகல கட்சிகளும் இணையவேண்டும்

## வரதராஜப்பெருமாள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 19

"தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள அனைத்துக் கட்சிகளும், இலங்கையில் உள்ள அனைத்து முற்போக்கு ஜனநாயக சக்திகளும் மாகாண சபைகள் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்." - இவ்வாறு இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"மாகாண சபைகள் தேத்தல் தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள கட்சிகளோடு நான் இணைந்து அண்மையில் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தேன். மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனடியாக எந்த வகையான காரணமும் சொல்லி காலம் தாழ்த்தாமல் உடனடியாக நடத்தவேண்டும்.

"இந்தக் கோரிக்கையை அனைத்து தமிழ் பேசுகின்ற மக்கள் மத்தியில் உள்ள கட்சிகளும் நாட்டின் அனைத்துக் கட்சிகளோடும் இணைந்தும் தனித்தனியாகவும் முன் வைக்க வேண்டும் என்ற இணக்கத்தோடு இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

"தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது இலங்கை மக்கள் அனைவருடைய கோரிக்கையாகவும்தான் பார்க்கிறேன். நடத்தப்பட வேண்டிய தேர்தலை உரிய காலத்தில் நடத்தாமல் இருப்பது அரசியல் யாப்புக்கும் விரோதமானது.

"ஜனநாயகத்தை விரோதமாக்கி அதிகாரத்தில் இருக்கின்ற தேசிய மக்கள் சக்தியினர் காரணங்கள் எதையும் கூறாமல் மாகாண சபைகள் தேர்தலை நடத்தவேண்டும்." - என்றார். (ஐ)

# குடத்தனையில் பொலிஸ், இராணுவம் சுற்றிவளைப்பு

வடமராட்சி, ஒக். 19

குடத்தனை - மாளிகைத் திடல் பகுதியில் நேற்றைய தினம் பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அந்தப் பகுதியில் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக செயல்படும் இளைஞர் ஒருவரை கைது செய்யும் நோக்கிலேயே இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வாள்வெட்டு குற்றச்சாட்டுக்கு உள்ளான சந்தேகநபர் கைதுசெய்யப்படுவதும் பிணையில் வெளிவருவதும் வழமையாகியுள்ளது. பிணையில் வரும் அவர் வாள்வெட்டில் ஈடுபடுவதும் வழக்கமாகியுள்ளது. இந்த நிலையில், அவரை கைது செய்யவே நேற்றைய தினம் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

எனினும், சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்பில் அறிந்த சந்தேகநபர் ஏற்கனவே அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தார் என்று கூறப்படுகிறது. (ஐ-02 -08)

# ஊரெழு கணேச வித்தியாசாலையில் கையெழுத்து சஞ்சிகைகள் வெளியீடு



யாழ்ப்பாணம், ஒக். 19

ஊரெழு கணேச வித்தியாசாலையின் மாணவர்களால் ஆக்கப்பட்ட ஏழு கையெழுத்து சஞ்சிகைகள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு பாடசாலையின் மண்டபத்தில் அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற நூலகர் க.சௌந்தரராஜன் கலந்து கொண்டார். (ஐ)

# தும்பளை விபத்தில் ஒருவர் படுகாயம்!

வடமராட்சி, ஒக். 19

வேகக்கட்டுப்பாட்டை இழந்த இ. போ. ச. பேருந்து சைக்கிளில் பயணித்தவரை மோதியதில் அவர் படுகாயமடைந்தார்.

பருத்தித்துறை - தும்பளை - மணியகாரன் சந்தியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது.

பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து பொற்பதிக்கு பயணிகளுடன் சென்ற இ. போ. சவுக்கு சொந்தமான பேருந்தே இந்த விபத்தை ஏற்படுத்தியது.

இந்த விபத்தில், சைக்கிளில் சென்று கொண்டிருந்த அதே இடத்தைச் சேர்ந்த 38 வயதான நபர் படுகாயமடைந்தார். அவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-08)

# நல்லூரிலிருந்து கதிர்காமத்துக்கு புனித திருத்தல தரிசன யாத்திரை

யாழ்ப்பாணம், ஒக். 19

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து கதிர்காமம் நோக்கிய வேல் தாங்கிய புனித திருத்தல தரிசன யாத்திரை எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஐப்பசி மாத கார்த்திகை விரதத்தை முன்னிட்டு நாட்டில் சமாதானம் நிலைபெற வேண்டி இலங்கை முதலுதவி சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் இந்த யாத்திரை நடைபெறவுள்ளது.

இந்த யாத்திரை நவம்பர் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கதிர்காம கந்தன் ஆலயத்தை சென்றடையும்.

இதில், பங்கேற்க வருபவர்கள் நாளை திங்கட்கிழமைக்குள் 077 923 6552 என்ற கைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொண்டு தமது பங்கேற்பை உறுதிப்படுத்துமாறு இலங்கை முதலுதவி சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் தேசிய ஆணையாளர் வை. மோகனதாஸ் கேட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. எம். எவ்வின் நிதி வசதி திட்டத்தில் இலங்கை உறுதியாக இருக்கவேண்டும்!

## ஐ. எம். எவ்வின் ஆசிய - பசுபிக் பணிப்பாளர்

நியூயோர்க், ஒக். 19

**சர்வதேச நாணய நிதியத் தின் நீட்டிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தில் இலங்கை உறுதியாக இருக்கவேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய - பசுபிக் பிராந்திய பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணா சிறீநிவாசன் வலியுறுத்தியுள்ளார்.**

இதேவேளை, எதிர்காலத்தில் சீர்திருத்தங்கள் முக்கியமானவை என்று அதன் பிரதி பணிப்பாளர் தோமஸ் ஹெல்பிங் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கியின் வருடாந்த கூட்டங்களுக்கு இணையாக நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த தோமஸ் ஹெல்பிலிங், "நாங்கள் ஒரு படி பின்னோக்கிப் பார்த்தால், பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. அதன் பலனாக இப்போது மிகவும் வலிமையான வளர்ச்சி கிடைத்துள்ளது. கடந்த ஆண்டு 5 சதவீத வளர்ச்சி. இந்த ஆண்டு அது 4.2 சதவீதமாக இருக்கும் என்று நாங்கள் மதிப்பிட்டுள்ளோம். அடுத்த ஆண்டு அது 3 சதவீத மாகமாறுவதற்கான ஆற்றல் உள்ளது. இந்த நேரத்தில் கொடுக்கக்கூடிய மிக முக்கியமான அறிவுரை என்னவென்றால், அதிக பலன்களைப் பெறுவதற்கு இந்தத் திட்டத்தை மேலும் தொடர்வது முக்கியம். அப்போது வளர்ச்சி வரும். அது தொடர்ந்து நடைபெறும்.

இலங்கையின் ஸ்திரத்தன்மைக்கு முக்கியமானது என்னவென்றால், வரவு - செலவுத் திட்டத்தில் ஏற்படக்கூடிய அபாயங்களைக் குறைப்பதில் பொது நிதி ஒருங்கிணைப்பு ஒரு முக்கிய பங்கைக் வகிக்கும். அத்துடன், பொது நிறுவனங்களின் சாத்தியக்கூறுகள் குறித்தும் கவனம் செலுத்தப்படவேண்டும். இந்தப் பலன்கள் நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்க இது மிகவும் அவசியம்" - என்றார். (ஐ)

# மனித - யானை மோதலை தவிர்க்க தேசிய செயல்திட்டம் தயாராகிறது

## நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 19

மனித - யானை மோதலைத் தவிர்ப்பதற்கு அதிகாரிகள் தேசிய செயல்திட்டத்தைத் தயா ரித்து வருகின்றனர் என்று சட்ட மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

யானைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சட்டவிரோத மின்சார வேலிகளை கண்டறிந்து அகற்றுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி ஷெமந்தி டுனுவில்லே இந்த விடயம் தொடர்பில் மன்றுக்கு அறியப்படுத்தினார்.

வரைவு செயல்முறை இறுதி செய்யப்பட்டவுடன், தேசிய செயற்திட்டத்தின் நகல், மனு மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் மன்றில் உறுதியளித்தார்.

இதையடுத்து, இந்த வழக்கை எதிர்வரும் 2026 ஜனவரி 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, 2023 ஆம் ஆண்டில் இலங்கையில் 488 யானைகள் காணாமல் போயின என்றும் 2024 நவம்பர் இறுதிக்குள் மேலும் 354 யானைகள் காணாமல் போயின என்றும் மனுதாரர் கூறியுள்ளார். இவற்றில், 2023 ஆம் ஆண்டில் மின்சாரம் தாக்கி சுமார் 72 யானைகள் கொல்லப்பட்டன. 2024 ஆம் ஆண்டில் 49 யானைகள் மின்சாரம் தாக்கிக் கொல்லப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சட்டவிரோத அரிசி இறக்குமதியால் சதொசவுக்கு ரூ. 1,515 கோடி இழப்பு

கொழும்பு, ஒக். 19

2014, 2015ஆம் ஆண்டுகளில் சட்ட விரோதமான முறையில் அரிசி இறக்குமதி செய்ததன் விளைவாக சதொசவுக்கு ஆயிரத்து 515 கோடியே 70 இலட்சத்து 31 ஆயிரத்து 18 ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கோப் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விசாரணை குற்ற புலனாய்வு துறையால் நடத்தப்பட்டு சட்ட மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

2021, 2022 ஆண்டுகளுக்கான சதொச நிறுவனத்தின் கணக்காய்வாளர் பொது அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயல்திறன், பரிசீலனையை நோக்கி நடைபெற்ற குழு கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது. இந்தக் கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

2014 மற்றும் 2015 ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்காக 2 ஆயிரத்து 701 கோடியே 19 இலட்சத்து 80 ஆயிரத்து 142 ரூபாய் செலவிடப்பட்டது. ஆனால், விற்பனை மூலமாக ஆயிரத்து 185 கோடியே 49 இலட்சத்து 49 ஆயிரத்து 124 ரூபாயே கிடைத்தது. இதன் மூலம் சுமார் ஆயிரத்து 500 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூர் அரிசி சந்தை நிலை, நெல் அறுவடை அளவு மற்றும் களஞ்சிய வசதிகள் போன்றவை சரிவர ஆய்வு செய்யப்படாமலே சட்டபூர்வமான கொள்முதல் நடைமுறைகளை மீறி அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக கோப் குழு குறிப்பிட்டுள்ளது.

# நீதித்துறையில் செல்வாக்கு செலுத்தும் கருத்துக்கு சமன்

## லக்மாலியின் கருத்து தொடர்பில் காவிந்த

கொழும்பு, ஒக். 19

நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமச்சந்திரவின் கருத்து நீதித்துறையில் செல்வாக்கு செலுத்துவதற்குச் சமமானது என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், இது நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படலாம். தாம் ஒரு சட்டத்தரணி இல்லையென்ற போதிலும் அரசாங்க பாராளுமன்ற உறுப்பினரின் கருத்து நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படலாம் என்று கருதுகிறார் - என்றும் கூறினார். (ஐ)

# மாணவியை காயப்படுத்திய அதிபர் தொடர்பில் விசாரணை

சிலாபம், ஒக். 19

பாடசாலைக்கு விடுப்பு எடுத்த மாணவியை அடித்து காயப்படுத்திய பாடசாலை அதிபர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புத்தளம் - ஆனமடு கல்வி வலயத்தின் பாடசாலை ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், தரம் 2இல் கல்வி கற்கும் 7 வயது மாணவி ஒருவரே இவ்வாறு காயமடைந்தார்.

இது தொடர்பில் ஆனமடு பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த அதிபர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், குற்றஞ் சாட்டப்பட்ட அதிபர்மீது இதற்கு முன்னரும் இவ்வாறான குற்றச்சாட்டுகள் உள்ளன என்றும் கூறப்படுகிறது. (ஐ)

# சிறை அதிகாரி படுகொலை; மற்றொரு சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஒக். 19

முன்னாள் சிறைச்சாலை அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை - பொல்கொடை பாலம் அருகே கடந்த ஒகஸ்ட் 21ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் முன்னாள் சிறை அதிகாரியை சுட்டுக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் கடந்த வியாழக்கிழமை மற்றொரு நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஹிரண பொலிஸ் பிரிவில் மறைந்திருந்த நிலையில் களுத்துறை மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார். கைதானவர் 28 வயதுடையவராவார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் கொலைக்கு வட்ஸ் அப் சமூகவலைதளத்தை பயன்படுத்தியமை தெரிய வந்துள்ளது. அத்துடன், அவரிடமிருந்து 5 வெட்டுக்கத்திகள், கைபேசி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# விபத்தில் இளைஞர் பலி!

கொழும்பு, ஒக். 19

வானும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் 24 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கண்டி - கொழும்பு வீதியில் கம்பஹா - கடவத்தை - கிரில்லவல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு நோக்கிப் பயணித்த வானுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் காயமடைந்து மருத்துவமனை யில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் மஹவ பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவராவார்.

மேலதிக விசாரணைகளை கடவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இராணுவ ஆயுதசாலைகளை பார்வையிட்ட பிரதி அமைச்சர்



கொழும்பு, ஒக். 19

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர இராணுவத்தின் முக்கிய வெடிமருந்து, ஆயுத களஞ்சிய நிலையங்களைப் பார்வையிட்டுள்ளார்.

இதன்போது, பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லசந்த ரொட்ரிகோ ஆகியோரும் உடனிருந்தனர்.

பிரதி அமைச்சர் வெடிமருந்து களஞ்சிய தொகுதிகளை ஆய்வு செய்ததுடன், அந்த வளாகத்தின் தற்போதைய செயல்பாடு மற்றும் பாதுகாப்பு நிலைமைகளை மதிப்பாய்வு செய்தார்.

இதைத் தொடர்ந்து நடந்த கலந்துரையாடலில், பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளை மேம்படுத்துதல், அவசரகால நிலைமைகளுக்கு முகம் கொடுக்க தேவைப்படும் திட்டங்களை உருவாக்குதல், வெளிப்புற நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல், சீரான செயற்பாடு, பொறுப்புக்கூறல் மற்றும் ஒழுங்குமுறை இணக்கத்தை உறுத செய்வதற்காக நிலையான செயற்பாட்டு நடைமுறைகளை ஒழுங்குபடுத்துதல் உள்ளிட்ட பல முக்கியமான விடயங்கள் பேசப்பட்டன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் 72 வீதத்தினருக்கு சத்தான உணவு இல்லாத நிலை!

## எகெட் கரித்தாஸ் நிறுவனம்

திருகோணமலை, ஒக். 19

திருகோணமலையில் சுமார் 72 சதவீத மக்கள் சத்தான உணவைப் பெற முடியாமல் கஷ்டப்படுகின்றனர். எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து உணவு பாதுகாப்பையும் சத்துணவையும் உறுதி செய்யப் பாடுபட வேண்டும் என எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்தந்தை போல் றொபின்சன் தெரிவித்துள்ளார்.

உலக உணவு தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட விவசாய திணைக்களத்துடன் எகெட் கரித்தாஸ் நிறுவனம் நடத்திய நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உணவு வீணாவதைத் தவிர்க்கவும் இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் பசுமைச் சூழலை ஊக்குவிக்கும் நிலைதொழில்முறைகளைப் பின்பற்றவும் அனைவரும் உறுதியாக செயல்பட வேண்டும் என்றும் அவர் இதன்போது வலியுறுத்தினார். (ஐ)

# பெருந் தோட்ட தொழிலாளர்கள் தீபாவளிக்கு ஏமாற்றப்பட்டுள்ளனர்

## வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு

நுவரெலியா, ஒக். 19

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் இந்த முறை தீபாவளிக்கு ஏமாற்றப்பட்டுள்ளனர் என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

"பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதனம் குறித்து ஜனாதிபதி கூறியமை போன்று, பண்டிகை காலத்தில் தொழிலாளர்களுக்கு நற்செய்தி ஒன்று கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் நாங்கள் காத்திருந்தோம். ஆனால், அந்த எதிர்பார்ப்பு தற்போது தோல்வியடைந்துள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதனம் குறித்து முதலாளிமார் சம்மேளனத்தின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி ஏலவே பேச்சுநடத்தியிருந்த நிலையில், வேதன நிர்ணய சபை கலந்துரையாடலில் முதலாளிமார் சம்மேளனம் கலந்து கொள்ளாதமை, அரசாங்கத்தின் அழைப்பை உதாசீனம் செய்துள்ளதாகக் கருதப்படுகின்றது. இந்த விடயம் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன விடயத்தில் பெரும் தோல்வியை எடுத்துக் காட்டுகிறது.

மேலும், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1,750 ரூபாய் நாளாந்த வேதனம் தருவதாக அரசாங்கம் உறுதியளித்தை நாங்கள் இதுவரை நம்பியிருக்கிறோம். வருட இறுதிக்குள் ஜனாதிபதி கூறியமை போல பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான குறித்த வேதனத்தை பெற்று தருவார் என நம்புகிறோம் - என்றும் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார். (ஐ)

# மணல் அகழ்வில் ஈடுபட்ட 13 சந்தேகநபர்கள் கைது!

மட்டக்களப்பு, ஒக். 19

முந்தனையாற்றில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 13 பேரை உழவு இயந்திரங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு - கரடியனாறில் கித்துள் முந்தனையாற்றிலேயே இந்த சட்டவிரோத செயல்பாடு இடம்பெற்றது.

இது தொடர்பில், அறிந்த கிழக்கு மாகாண விசேட அதிரடி படையினர் நேற்றுமுன்தினம் அதிகாலை குறித்த பகுதியை சுற்றிவளைத்தனர்.

இதன்போதே, 13 உழவு இயந்திரங்களுடன் மணல் அகழ்வில் ஈடுபட்ட 13 பேர் கைதுசெய்யப்பட்டனர். கைதானவர்கள் சட்ட நடவடிக்கைக்காக கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நீண்ட காலமாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் கௌரவிப்பு

திருக்கோவில், ஒக். 19

அம்பாறை - திருக்கோவில் கல்வி வலயத்தில் இந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 127 மாணவர்களும் அவர்களுக்கு கற்பித்த 40 ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். குணபாலன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் மூத்த உதவிச் செயலாளர் சு. கரன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

ஆசிரியர்கள் 40 பேரும் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதேசமயம் சித்தியடைந்த 127 மாணவர்களுக்கு வங்கிக் கணக்கில் 5 ஆயிரம் ரூபாய் வைப்பிலிடப்பட்டு, அதற்கான சேமிப்பு கணக்கு புத்தகமும் சான்றிதழ் மற்றும் பரிசுப் பொதிகளும் நினைவுச்சின்னங்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

# ரயில் மோதியதில் இந்தியர் படுகாயம்

பண்டாரவளை, ஒக். 19

பதுளை - எல்ல - 9 வளைவு பாலத்தை பார்வையிட வந்த சுற்றுலா பயணி ஒருவர் ரயில் மோதி காயமடைந்தார்.

நேற்று முற்பகல் 11:05 மணியளவில் பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயில் மோதியதில் அவர் நடைமேடைக்கும் ரயிலுக்கும் இடையில் சிக்கி காயமடைந்தார்.

இந்தியாவை சேர்ந்த ஷ்ராவன் லட்சுமி (வயது -34) என்ற பெண் இவ்வாறு காயமடைந்து தெனமோதர மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக பதுளை போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ)

# களுவாஞ்சிக்குடியில் சிறுவர் மகிழ்ச்சி கூடல்

மட்டக்களப்பு, ஒக். 19

மட்டக்களப்பு - மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் களுவாஞ்சிகுடி கிராம சமூக அமைப்புகளுடன் இணைந்து சிறுவர் மகிழ்ச்சி கூடல் நிகழ்வு பிரதேச செயலாளர் உ. உதயசிறீதர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சர்வதேச சிறுவர் தினத்தை யொட்டி களுவாஞ்சிகுடி சமுத்திரபுரம் திறந்த வெளித்திடலில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதில், சிறுவர்களுக்கு மகிழ்ச்சியூட்டக்கூடிய விநோத விளையாட்டுகளும் பொது மக்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளும் நடத்தப்பட்டு பரிசுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், களுவாஞ்சிகுடி பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப்பலர் பங்கேற்றனர். (ஐ)

# போட்டி கைகலப்பானதில் மூன்று பேர் படுகாயம்!

மட்டக்களப்பு, ஒக். 19

வீதியால் செல்வோரை தமது கடைக்கு வருமாறு ஏட்டிக்குப் போட்டியாக கூப்பிட்ட இரு வர்த்தக நிலையங்களின் ஊழியர்களிடையே ஏற்பட்ட கைகலப்பில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரில் நடந்த இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த வியாழக்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இருவர் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை கோட்டைமுனை பாலம் அருகே அருகருகாக இரு ஆடை விற்பனை நிலையங்கள் உள்ளன. அவற்றின் ஊழியர்கள் தமது கடைகளின் முன்பாக நின்று வீதியால் செல்வோரை தமது கடைக்கு வருமாறு ஏட்டிக்கு போட்டியாக அழைத்துள்ளனர். இதன்போது, இரு கடைகளின் ஊழியர்களிடையே தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, கைகலப்பு ஏற்பட்டது. அப்போது, கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில், இரு தரப்பையும் சேர்ந்த மூன்று பேர் படுகாயமடைந்து மட்டு. போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இருவர் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# யானையின் உடல் வயலிலிருந்து மீட்பு



மட்டக்களப்பு, ஒக். 19

வயல் ஒன்றிலிருந்து யானை ஒன்றின் உடல் மீட்கப்பட்டுள்ளது. வாகரை - மதுரங்கேணி குளத்துக்கு அண்மையாகவே இந்த யானையின் உடல் மீட்கப்பட்டது.

நீண்ட நாட்களுக்கு முன்னர் இந்த யானை இறந்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. மேலும், இது தொடர்பில் வன விலங்கு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, யானையின் உடலை வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் அந்தப் பகுதியிலிருந்து அகற்றவில்லை என்றும் அதனை அகற்றினாலேயே இந்தப் போகத்துக்கான விதைப்பு நடவடிக்கையை ஆரம்பிக்கமுடியும் எனவும் விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

# கிழக்கு பாடசாலைகளுக்கு செவ்வாய்க்கிழமை விடுமுறை

திருகோணமலை, ஒக். 19

கிழக்கு மாகாணத்தின் அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் தீபாவளியை முன்னிட்டு நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை விசேட விடுமுறை வழங்கப்படுகிறது என்று மாகாண ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது.

இந்தத் தினத்துக்குப் பதிலாக எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை பதில் பாடசாலை நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஊவா, சப்ரகமுவ, மத்திய மாகாணங்களின் அனைத்துத் தமிழ் பாடசாலைகளுக்கும் இதேபோன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சட்டத்தரணிக்கு மிரட்டல் சந்தேகநபருக்கு பிணை!

திருகோணமலை, ஒக். 19

திருகோணமலையில் சட்டத்தரணி ஒருவரை அச்சுறுத்தினார் என்ற முறைப்பாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட நபருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன், இந்த வழக்கு எதிர்வரும் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, சந்தேகநபர் கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த சட்டத்தரணியை நீதிமன்றில் வைத்து அச்சுறுத்தினார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
19.10.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஐப்பசி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# யதார்த்தங்களை புறம்தள்ளினால்

தமிழ் மக்கள் மத்தியில் ஒரு தொகுதியினர் புலம்பெயர்விற்கான பேராசையுடன் இருக்கின்றனர். அவர்களில் வாய்ப்புள்ளவர்கள் தினமும் புலம்பெயர்கின்றனர். கொழும்பிலுள்ள கடவுச்சீட்டு நிலையத்தில் ஒரு நாள் செலவிட்டால் ஒரு நாளுக்கு சராசரியாக எத்தனை பேர் வெளியேறுகின்றனர் என்பதை காணலாம். வவுனியாவிலுள்ள கடவுச்சீட்டு அலுவலகத்தில் தினமும் கடவுச் சீட்டுக்காக காத்திருக்கும் இளைஞர் வரிசை நீண்டு கொண்டே செல்கின்றது.

ஏற்கனவே ஆற்றலுள்ள தமிழ் தலைமுறையொன்று ஐரோப்பிய நாடுகளை நோக்கி நகர்ந்துவிட்டது. அவர்களோ, அவர்களது அடுத்த தலைமுறையினரோ நாடு திரும்பப் போவதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் இலங்கை அவர்களுடைய நாடு என்று சிந்திக்கக் கூடிய மனநிலையில் அவர்கள் இருக்கமாட்டார்கள். அவர்களுடைய பக்கத்திலிருந்து நோக்கினால் அதில் தவறில்லை. ஏனெனில் வசதியுள்ள இடங்களை நோக்கி புலம்பெயர்ந்தவர்கள், மீண்டும் பழைய வசதியற்ற இடங்களை நோக்கி வரமாட்டார்கள். இது மனித மனோநிலை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இலங்கையில் வாழ வேண்டிய நிலையில் இருப்பவர்கள்தான், தங்களுக்கான வாய்ப்பைத் தேடுவார்கள். அவர்களுக்குத்தான் அபிவிருத்தி தேவை. அவர்களுக்கான அபிவிருத்தியை, அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகளால் வழங்க முடியாதபோது, எவ்வாறு வசதியான இடங்களை நோக்கி மக்கள் இடம்பெயர்வார்களோ அப்படித்தான், தாங்கள் நம்பிய தலைமைகளால் தங்களுக்கு பயனில்லை என்று கருதுகின்ற போது, வேறு தலைமைகளை தேடுவார்கள். அவ்வாறான சூழலில், அவர்கள் எந்த இனத்தவர் என்னும் கேள்வி மக்களுக்கு அவசியமற்ற ஒன்றாகி விடும்.

இந்த அடிப்படையில்தான் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அணுகுமுறைகளை நோக்க வேண்டும். இதற்கு முன்னர் இருந்த தென்னிலங்கை தலைமைகள் அனைத்துமே வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் கட்சிகளுடன் டீல் போடுவதன் ஊடாக தமிழ் அரசியல் சூழலுக்குள் நுழைய முற்பட்டனர். ஆனால், தேசிய மக்கள் சக்தியின் அணுகுமுறை முற்றிலும் வேறானது. அவர்கள் எந்தவொரு தமிழ் கட்சிகளுடன் உரையாடவில்லை. அதற்கு மாறாக மக்களை நோக்கிச் செல்கின்றனர். மக்களுடன் பேசுகின்றனர். மக்கள் அவர்களுடன் பேசுகின்றனர்.

இது தமிழ் கட்சிகளுக்கு ஒரு புறம் சவலாகவும் இன்னொரு புறம் அச்சத்தையும் ஏற்படுத்துகின்றது. அதனை எதிர்கொள்வதற்காக பழைய எதிர்ப்பு அரசியலிலேயே தமிழ் கட்சிகள் தஞ்சமடைகின்றன. ஆனால், எதிர்ப்பு அரசியல் பிரசாரங்கள் தொடர்ந்தும் தமிழ் கட்சிகளுக்கு பயன்படப் போவதில்லை. தமிழ் கட்சிகள் நிலைமைகளை புரிந்து, அதற்கேற்ப யதார்த்தமாக செயலாற்ற வேண்டும். ஜே.வி.பி. தொடர்பில் எதிர்மறையான பிரசாரங்களை செய்வதைவிடுத்து, அவர்கள் எதனைக் கூறுகின்றார்களோ அதனைச் செய்யுங்கள் என்னும் வகையில் தங்களின் அரசியல் பிரசாரங்களை மாற்ற வேண்டும்.

ஆனால், தமிழ் கட்சிகளோ பழைய அணுகுமுறையிலேயே மீண்டும், மீண்டும் தஞ்சமடைகின்றன. அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை ஆதரித்தல் எதிர்த்தல் என்னுமடிப்படையில் தங்களுக்குள் முட்டி மோதிக் கொள்கின்றன. உண்மையில் செய்ய வேண்டியது அனைவருமாக ஒன்றிணைந்து, மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள், வடக்கு, கிழக்கின் அபிவிருத்தியில் பாராமுகம் காட்டவேண்டாம் என்னும் கோஷத்தை கையிலெடுக்க வேண்டும். தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் முன்னரைப் போல் இனிவரும் காலத்தில் அரசியலை முன்னெடுக்க முடியாது. இதுதான் இன்றைய அரசியல் யதார்த்தம். இந்த யதார்த்தத்தை புறம்தள்ளினால், தமிழ் அரசியலை மக்கள் புறம்தள்ளும் நிலைமை ஏற்படும்.

# ஆட்சிக்கு வந்த குறுகிய காலத்திலேயே கிராமப் புறங்களில் பல அபிவிருத்திகள்!

## அமைச்சர் உபாலி பன்னிலகே



கொழும்பு, ஒக். 19

ஆட்சிக்கு வந்த குறுகிய காலத்திலேயே கிராமப் புறங்களில் பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக கிராமிய அபிவிருத்தி அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

கேகாலை பகுதியில் இடம்பெற்ற பாதை திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

189 கிராம அபிவிருத்தித் திட்டங்களை நாங்கள் இதுவரை ஆரம்பித்துள்ளோம்.

இதன் மூலம், கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதே எங்கள் அமைச்சின் நோக்கமாகும்.

எங்கள் அமைச்சின் முக்கிய பணி என்னவென்றால், கிராம மக்கள் வருமானம் பெறும் வாய்ப்புகளை அதிகரிப்பதும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும் ஆகும். இதற்காக "பிரஜா சக்தி" எனும் ஒரு தேசிய திட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்.

இந்த திட்டத்தின் முக்கிய குறிக்கோள், கிராம மக்களின் சக்தியை பயன்படுத்தி, அவர்கள் தேவைக்கேற்ப திட்டங்களைத் திட்டமிடவும், அமுல்படுத்தவும், அதன் பயன்களை மக்களுக்கு வழங்கவும் உதவுவதாகும்.

இந்தத் திட்டம் தற்போது செயல்பாட்டிலிருக்கிறது. அடுத்த ஆண்டுக்காக, பிரஜாசக்தி திட்டத்தின் கீழ் கிராமப்புற வறுமையை ஒழிக்க பெரிய தொகை நிதி ஒதுக்கீடாக வழங்குமாறு நாங்கள் பாதீட்டு பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளோம்.

அதன்படி, இந்த ஆண்டில் ஆரம்பித்த திட்டங்களை அடுத்த ஆண்டில் மேலும் வலுப்படுத்தி செயல்படுத்துவதே எங்கள் எதிர்பார்ப்பு - என்றார். (அ)

# சிறைச்சாலை அதிகாரி கைது!

கொழும்பு, ஒக். 19

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவருக்கு போதைப்பொருள் மற்றும் கைப்பேசிகளை வழங்க உதவியதாகக் குற்றம்சாட்டப்பட்ட சிறைச்சாலை அதிகாரி ஒருவர் களுத்துறை வடக்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வஸ்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதான சிறைச்சாலை அதிகாரி என பொலிஸார் தெரிவித்துள்ளனர். களுத்துறை வடக்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 11 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 19

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் 11 மாவட்டங்களுக்கு விடுத்திருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.


இதன்படி, கண்டி மாவட்டத்தின் உடுநுவர மற்றும் உடுதும்பர, கேகாலை மாவட்டத்தின் புலத்கொஹூபிட்டிய மற்றும் யட்டியாந்தோட்டை, மாத்தளை மாவட்டத்தின் பல்லேபொல மற்றும் அம்பன்கோறளை பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இரண்டாம் கட்ட எச்சரிக்கை (நிலை 2) விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பதுளை மாவட்டத்தின் ஹல்தும்முல்ல மற்றும் ஊவபரணகம, காலி மாவட்டத்தின் நெலுவ, கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல, கண்டி மாவட்டத்தின் தெல்தோட்ட மற்றும் தொழுவ, கேகாலை மாவட்டத்தின் மாவனெல்ல, ருவன்வெல்ல, அரநாயக்க மற்றும் ரம்புக்கனை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் முதலாம் கட்ட எச்சரிக்கையின் (நிலை 1) கீழ் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, குருநாகல் மாவட்டத்தின் அலவ்வ மற்றும் ரிதீகம, மாத்தளை மாவட்டத்தின் உக்குவெல, ரத்தோட்டை, யட்டவத்த, மாத்தறை மாவட்டத்தின் பிட்டபெத்தற, மொனராகலை மாவட்டத்தின் மெதகம, நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ, ஹங்குராங்கெத்த, வலப்பனை, இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான, இம்புல்பே, எஹெலியகொட மற்றும் வெலிகெபொல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளும் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன நலன் மகத்தான செல்வம்!


பொ. ஜெயசந்திரன்

கல்வியின் முன்னேற்றத்தைத் தாண்டி, மன நலத்தில் உறுதியான மாணவர்களால்தான் எதிர்காலத்தில் நல்ல சமூகத்தை உருவாக்க முடியும். பள்ளிப் பருவம் தான் வாழ்க்கையின் அடித்தளமாக இருக்கிறது. இந்த காலகட்டத்தில் மாணவரின் மனதில் என்ன கருத்துகள் உண்டாகிறதோ, அது கடைசி வரையும் நிலைபெறுகிறது. மன நல ஆலோசனைகள் என்பது மாணவர்களுக்கு வழிகாட்டி. வாழ்வின் திசை காட்டி. இதனால், ஒவ்வோர் பள்ளியிலும் மன நல ஆலோசனைகள் வழங்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

மனதுக்கு உற்ற நண்பன் உடல். உடலுக்கு உற்ற நண்பன் மனம். இவை இரண்டும்தான் எப்போதும் ஒன்றாக இருக்கும். அன்றைய கடமையை அன்றே முடித்துவிட வேண்டும். ஏனென்றால், இன்று தூங்கி நாளை கண் விழிக்கும் போது, நேற்றைய நாள் நம்மிடமிருந்து போய் விட்டதாகக் கருத வேண்டும். அடுத்த நாளுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் முந்தைய நாளை எடுத்துச் செல்லக் கூடாது. எனவே, அன்றாடப் பணியை அன்றே செய்து முடித்தல் நல்லது.

இதைச் செய்யாமல் தவிர்க்கும்போது "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற பழமொழிக்கு ஏற்றவாறு நம் மன நலன் குன்றலை நம் முகமும், கண்ணும் வெளிச்சமிட்டு காட்டிக் கொடுத்துவிடும். நாளை என்பது நிச்சயம் இல்லை, நேற்று என்பது முடிந்துபோன பொய், இன்று என்பதே உண்மை. இம்மூன்றையும் கடைப்பிடித்தாலே வாழ்க்கையில் அதிகமான பிரச்னையை சமாளித்து சரி செய்து நம்முடைய உடல் நலன், மன நலத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.

"மனம்" மனிதனின் அதி நுட்பமான ஓர் அங்கம். அதுவே நம்மை மகிழ்ச்சியாகவும், சோகமாகவும், உற்சாகமாகவும், பதற்றமாகவும் ஆக்கக்கூடியது. ஆனால், எப்போது அது சோர்வடைகிறதோ, நம்மைச் சுவாசிக்க முடியாதபடி தடுமாறச் செய்து விடும். குறிப்பாக மன அழுத்தம், தனிமை, கவலை, பீதி தற்கொலை எண்ணங்கள் போன்றவை நம்மை உள்ளுக்குள்ளேயே கொன்று விடும்.



நாம் ஆசைப்பட்ட காரியம் நடக்கவில்லை, நேசப்பட்ட விஷயம் கிடைக்கவில்லை என்றால் அதற்காக மனம் வருந்தக் கூடாது. அதற்கு மாற்று வழி என்ன என்பது குறித்து யோசிக்க வேண்டும். நல்ல தூக்கம், உடற்பயிற்சி, நண்பர்களுடன் உரையாடுவது, உங்கள் முகத்தைக் கண்ணாடியில் பார்த்து நீங்களே ரசிப்பது இதுபோன்றவற்றின் மூலம் உங்கள் மன அமைதிக்கு நீங்கள் தீர்வு காணலாம்.

"யாராக இருந்தாலும் சரி, யாருக்காகவும் இருந்தாலும் சரி" உங்கள் சுய மரியாதையை மற்றவர்களுக்கு நீங்கள் எப்போதும் விட்டுக் கொடுக்கக் கூடாது.

அப்படி விட்டுக் கொடுப்பதற்கு ஆரம்பித்து விட்டால், அங்கேதான் தோன்றுகிறது உங்கள் மன நலனை நீங்களே கெடுப்பதற்கான தொடக்கப் புள்ளி. ஏனென்றால், இரவில் தூங்கும்போது அதை நினைத்து வருத்தப்படுவதைவிட, உங்கள் நண்பர்கள் அதை நினைவுபடுத்திக் கொண்டே இருப்பார்கள். அந்த வார்த்தைகள் நம்மை அடுத்த இலக்கை நோக்கிப் பயணிக்காமல், மனதை சிறையில் அடைத்த மாதிரி ஓர் எண்ணத்தை உங்களுக்குள் உருவாக்கும். ஆகவே, எப்போது உங்களுக்கு சுயமரியாதை என்ற நிலை இழக்கப்படுக்கிறதோ, அப்போது துணிச்சலாக அதற்கு எதிராக குரல் கொடுங்கள்.

மன நலம் என்பது நம் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தை ஆகியவற்றின் நிலையாண்மையைக் குறிக்கிறது. இது நம்முடைய எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் முக்கிய பங்காற்றுகிறது. ஒருவரின் மனநிலை நல்ல நிலையில் இல்லாத போது அவர் தனது வேலை, உறவுகள், நண்பர்கள் அனைத்திலும் பல சிக்கல்களை சந்திக்கக் கூடும். இதுபோன்ற பிரச்னைகளை எதிர்கொள்வதற்கான முதல் படி ஊக்கமாகப் பேசுதல், நம் நிலையை நமக்கே புரிய வைத்தல், தியானம், யோகா போன்றவற்றைக் கடைப்பிடித்தால் நம் மனதை சமநிலைப்படுத்த முடியும். மேலும், சரியான நேரத்தில் உணவு உட்கொள்ள வேண்டும்.

உலகம் முழுவதும் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் மனச்சோர்வுக்கு உள்ளானோர் எண்ணிக்கை 2019-ஆம் ஆண்டுக்குப் பிறகு 25 வீதம் அதிகரித்துள்ளது. இதில் பெரிய அளவில் பாதிப்புக்குள்ளானோர் பெண்கள், இளைஞர்கள்தான். உலகம் முழுவதும் சுமார் 100 கோடி பேர் மன நலப் பிரச்னைகளுடன், வாழ்ந்து வருவதாக உலக சுகாதார நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது. 8 நபர்களில் ஒருவர் மன நலக் கோளாறால் பாதிக்கப்படுகின்றார்.

தற்போது 100 இறப்புகள் நிகழ்ந்தால், அதில் ஒருவர் தற்கொலை செய்து கொண்டவராக உள்ளார். தற்கொலை செய்பவர்களில் 58 வீதம் பேர் 50 வயதுக்கு உட்பட்டவர்களாக உள்ளனர். ஒவ்வொரு 40 விநாடிக்கு ஒரு தற்கொலை நிகழ்கிறது. அதாவது ஆண்டுக்கு 8 லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

நகரங்களைவிட கிராமப்புறங்களில்தான் மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம். இதுதவிர, அதிகமானோர் தற்கொலைக்கு முயற்சித்து தோல்வியடைகின்றனர். இது மன நல ஆபத்தைக் காட்டும் எச்சரிக்கை மணி.

இதை முன்கூட்டியே உணர்ந்து தடுக்கும் வழிகளில் மன நலப் பராமரிப்பு மிகப்பெரிய பங்காற்றுகிறது. ஒவ்வோர் உயிரும் மதிப்பு மிக்கதுதான். நாம் அனைவரும் மன நலன் குறித்த புரிதலை வளர்த்தால், ஒவ்வோர் மனிதரும் அவருக்கேற்ற ஆதரவைப் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கலாம். ●

## இந்தவார ராசிபலன் 19.10.2025 - 25.10.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 02
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : திரயோதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் தெய்வப் பிரார்த்தனையால், தாமதமான திருமணங்களும் தடபுடலாக நடக்கும். ஆக்கபூர்வமான ஆலோசனை அளித்து அன்பு நண்பர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு உதவுவர். இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பார்கள். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கி ஒற்றுமையும், உயர்வு ஏற்படும். அரசுவகையில் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் எந்த ஒரு காரியத்தையும் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செயல்பட்டால் உன்னத நிலையை அடையலாம். சீரான பொருளாதார நிலையில், மனதிற்குப் பிடித்த படி மனை, வண்டி வாகனம் என அனைத்தும் கிடைக்கும். மாணவர்கள் காலத்தை வீணாக்காமல் கருத்துடன் படித்துப் பெற்றோர்களுக்கு பெருமை சேர்க்க வேண் டும். அரசுப் பணிக்கான தேர்வுகளில் வெற்றி பெற்று, புதிய பதவிக்கான பணி உத்தரவை பெறுவர்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உறவுகளுடன் சென்று மகான்கள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். அழகிய ஆடை ஆபரணங்கள் அணிவதால் மன மகிழ்ச்சி ஏற்படும். பயணங்கள் மூலம் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றம் காண முயல்வீர்கள். இடம் விட்டு இடம் மாறி வேறு இடத்தில் வாழ நேரும். லாபம் அதிகம் பெற புதிய விற்பனை யுக்திகளை கையாளுவீர்கள். போட்டியாளர்களை காட்டிலும் அரிய சாதனைகள் புரிவார்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டு, உயரிய கௌரவத்தையும் அடைவீர்கள். தந்தை வழி உறவுகள் நன்மை ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு தங்கள் துறைகளின் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படும். வீண் அலைச்சல்கள் ஏற்படலாம். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவது உறுதி. சுற்றுவட்டாரத்தில் நல்ல புகழும்,

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு தெய்வ சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதன் மூலம் வருவாய் பெருக்கமும் ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். ஆதாயம் அதிகரிக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். உடன் பிறப்புக்களின் மூலம் நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவிகள் கிடைக்கும். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். புதிய வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் அன்பு மனைவி மூலம் பூர்ண சுகம் கிடைக்கும். வாகன வசதிகள் மேம்படும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். புத்தி தெளிவு ஏற்படும். அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். ஆடம்பரச் செலவுகளை குறைத்தல் மூலம் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாகக் கிடைக்கும் விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு. இலாபத்தால் வசதிகள் பெருகும். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறல் விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் உதவியை நாடுவதில் தமிழர்கள் சிந்திக்க வேண்டிய காரணிகள் !



வீரகத்தி தனபாலசிங்கம்

திருகோணமலை கடற்கரையில் 2006 ஜனவரி 2 ஆம் திகதி விசேட அதிரடிப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட ஐந்து தமிழ் மாணவர்களில் ஒருவரான ரஜிஹரின் தந்தையார் வைத்தியக் கலாநிதி காசிப்பிள்ளை மனோகரன் செப்டெம்பர் பிற்பகுதியில் லண்டனில் காலமானார். மகனின் கொலைக்கு நீதி கோரி தனது இறுதிமூச்சு வரை போராடிய அவரையும் இது வரையில் நீதி மறுக்கப்பட்ட சகலரையும் நினைவுகூருவதற்கு 'மக்கள் செயல்' என்ற அமைப்பு அக்டோபர் 6 ஆம் திகதி 'கானல் நீதி" என்ற தொனிப் பொருளில் யாழ் நகரில் தந்தை செல்வா கலையரங்கில் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

அந்த நிகழ்வில் உரையாற்றியவர்களில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நிகழ்த்திய உரைக்கு தமிழ் ஊடகங்கள் குறிப்பாக பத்திரிகைகள் பெரும் முக்கியத்துவத்தைக் கொடுத்திருந்தன. உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்கு இலங்கை அரசை பொறுப்புக்கூற வைப்பதற்கு சர்வதேச சமூகத்தின் உதவியை நாடி தமிழர்கள் இதுகாலவரையில் முன்னெடுத்த முயற்சிகளின் இன்றைய நிலை குறித்து அவர் விளக்கிக் கூறியதே பிரதான காரணமாக இருந்தது என்லாம்.

பொன்னம்பலம் தனது உரையில் தமிழர்களின் நீதி தேடலின் இன்றைய இக்கட்டான நிலையை தெளிவுபடுத்தியதுடன் நீதியைப் பெறுவதற்கு தமிழர்கள் பயணிக்க வேண்டிய பாதை மற்றும் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகள் தொடர்பிலான தனது நிலைப்பாட்டையும் விளக்கிக்கூறினார்.

பொறுப்புக்கூறல் விவகாரம் ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குள் முடக்கப்பட்டிருக்கும் வரை தமிழர்களுக்கு ஒருபோதுமே நீதி கிடைக்கப் போவதில்லை என்றும் தற்போதைய சூழ்நிலையில் எந்தவொரு வெளிநாட்டு அரசுமே இலங்கையை எந்தவொரு நீதிமன்றத்தின் முன்பாகவும் நிறுத்துவதற்கு தயாராயில்லை என்றும் கூறிய பொன்னம்பலம், மனித உரிமைகள் பேரவையில் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கும் தீர்மானங்கள் சகலதுமே சர்வதேச வல்லரசுகளின் புவிசார் அரசியல் நலன்களை அடைவதை நோக்கமாகக் கொண்ட கருவிகளாக இருந்தனவே தவிர, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியையும் பொறுப்புக்கூறலையும் உறுதிசெய்யக்கூடியவையாக இருக்கவில்லை என்ற தனது கட்சியின் நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்திக் கூறினார்.

ஜெனீவா செயன்முறைகள் தமிழர்களுக்கு நடந்ததை வெறுமனே போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாக குறுக்குவதாக அமைந்திருப்பதாக குற்றஞ்சாட்டிய பொன்னம்பலம் இலங்கையில் இடம் பெற்றது தமிழின அழிப்பு என்று உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார். மனித உரிமைகள் பேரவையின் ஊடாக இன அழிப்புக்கு இலங்கை அரசைப் பொறுப்புக்கூற வைப்பது ஒருபோதும் சாத்தியமில்லை என்பது அவரது உறுதியான நம்பிக்கையாக இருக்கிறது.


அவரின் கருத்துக்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 கூட்டத் தொடரின்போது இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பாக அக்டோபர் 6 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பின்புலத்தில் நோக்க வேண்டியிருக்கிறது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஆணையை மேலும் இரு வருடங்களுக்கு புதிய தீர்மானம் நீடித்திருக்கிறது. அதன் மூலமாக மனித உரிமைகள் அலுவலகத்தில் ஏற்கெனவே நிறுவப்பட்டிருக்கும் 'இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தினால் (**Sri Lanka Accountability Project**) முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறையும் இரு வருடங்களுக்கு நீடிக்கப்படுகிறது. இதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரித்திருக்கிறது.

மனித உரிமைகள் பேரவையின் 60 வது கூட்டத் தொடர் தொடங்குவதற்கு முன்னதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியையும் வேறு சில தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களையும் உள்ளடக்கிய தமிழ் தேசிய பேரவையும் இலங்கை தமிழரசு கட்சியும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கும் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கும் தனித்தனியாக கடிதங்களை அனுப்பியிருந்தன. அந்த கடிதங்களில் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்படவிருந்த தீர்மானத்தில் உள்ளடக்கப்பட வேண்டியவை என்று அவர்கள் கருதும் விடயங்களை இரு தரப்பினரும் குறிப்பிட்டிருந்தனர்.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் ஆணை நீடிக்கப்படுவதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்த தமிழ் தேசிய பேரவை குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் அதன் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. அத்துடன் இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர், பொதுச்சபை மற்றும் பாதுகாப்புச்சபையை வலியுறுத்தும் முன்மொழிவு புதிய தீர்மானத்தில் இடம் பெறவேண்டும் என்றும் தமிழ் தேசிய பேரவை வேண்டுகோள் விடுத்திருந்தது.

அதேவேளை, தமிழரசு கட்சி ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றும் செயன்முறை ஊடாக இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்வது பெரும்பாலும் நடைமுறைச் சாத்தியற்றது என்ற போதிலும், அந்த நீதிமன்றத்தை தாபித்த றோம் சாசனத்தை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கையை இணங்க வைப்பதற்கான முன்மொழிவை தீர்மானம் முன்வைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தது. றோம் சாசனத்தை இலங்கை



ஜெனீவாவில் இறுதியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம்- கஜேந்திரகுமார் வெளிப்படுத்திய கருத்துக்களின் பின்புலத்தில் சில சிந்தனைகள்.

ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஏற்கெனவே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரும் யோசனை கூறியிருந்ததையும் தமிழரசு கட்சி கடிதத்தில் சுட்டிக்காட்டியது.

அந்த வேண்டுகோள்களை மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தைக் கொண்டு வந்த பிரிட்டன், கனடா உட்பட மையநாடுகள் கவனத்தில் எடுத்ததற்கான தடயம் எதையும் தீர்மானத்தில் காணவில்லை. முன்னைய தீர்மானங்களை விடவும் புதிய தீர்மானம் கடுமையானதாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்த தமிழ்த் தரப்புகளுக்கு பலத்த ஏமாற்றமாகப் போய் விட்டது. இலங்கை மீதான சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பு மேலும் இரு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டதை தமிழரசு கட்சி வரவேற்றது.

"இலங்கையில் பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதற்கான தீர்மானம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பு இல்லாமல் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 2012 ஆம் ஆண்டில் இருந்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்ற போதிலும், 16 வருடங்களாக முன்னேற்றம் இல்லாதிருப்பது குறித்து அதிருப்தியடைந்திருந்தாலும், இலங்கை மீதான சர்வதேச கண்காணிப்பு இன்னொரு இரு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டிருப்பதை நாம் வரவேற்கிறோம்" என்று தமிழரசு கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் 'எக்ஸ்' சமூக ஊடகத்தில் செய்த பதிவில் குறிப்பிட்டிருந்தார். புதிய தீர்மானத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிராகரித்த போதிலும், வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்து அதை சவாலுக்கு உட்படுத்தவில்லை. சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறை மேலும் இரு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டிருப்பதே அடிப்படைப் பிரச்சினை என்று அரசாங்கம் கூறியது. அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து பாராளுமன்றத்தில் விளக்கமளித்த வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் , "போர் முடிவுக்கு வந்த உடனடியாகவே நம்பகத்தன்மை வாய்ந்த ஒரு தேசியப் பொறிமுறை அமைக்கப்பட்டிருந்தால், 16 வருடங்களாக ஜெனீவாவில் இலங்கையின் பொறுப்புக்கூறல் பிரச்சினை நீடித்திருக்காது. பிரச்னை சர்வதேச மயப்படுத்தப்பட்டதற்கு முன்னைய தலைமைத்துவத்தின் குறுகிய அரசியல் குறிக்கோள்களும் தொலைநோக்கின்மையுமே காரணம்" என்று குற்றஞ்சாட்டினார்.

இலங்கையின் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் நிலைவரத்தின் முன்னேற்றம் குறித்து முதலில் ஒரு எழுத்துமூல அறிக்கையை மனித உரிமைகள் பேரவையின் 63 வது கூட்டத் தொடரிலும் விரிவான அறிக்கையை 66 வது கூட்டத்தொடரிலும் சமர்ப்பிக்க வேண்டும் என்று தீர்மானம் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தை கேட்டிருக்கும் நிலையில், இரு வருடங்களுக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறல் விவகாரத்தில் எந்தளவுக்கு அக்கறை காட்டும் என்ற கேள்வி எழுகிறது. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர்கள் தொடங்குவதற்கு முன்னதாக மாத்திரமே அரசாங்கங்கள் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தும் நோக்கில் சில அறிவிப்புக்களைச் செய்வதே வழமையாக இருந்து வந்தது.

அந்த போக்கில் இருந்து மாறுபட்டு செயற்படுவதற்கு தேவையான அரசியல் துணிவாற்றலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெளிக்காட்டும் என்று நம்பக்கூடியதாக இனப்பிரச்சினையில் அதன் அணுகுமுறைகள் அமையவில்லை. பொறுப்புக்கூறல் விவகாரம் சர்வதேசமயப்பட்டதற்கு முன்னைய தலைமைத்துவத்தின் குறுகிய அரசியல் குறிக்கோள்களே காரணம் என்று கூறும் வெளியுறவு அமைச்சரினால் காலங்கடந்த நிலையிலாவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓரளவுக்கேனும் நம்பிக்கையைத் தரக்கூடிய உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை நிறுவுவதற்கு தனது அரசாங்கத்தை வழிக்குக் கொண்டு வரமுடியுமா?

இந்த நிலையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது சிந்தனையில் இலங்கை அரசாங்கம் மீது நெருக்குதல்களை பிரயோகிப்பதற்கு தமிழர்களுக்கு இருக்கக்கூடிய மார்க்கங்கள் குறித்து யாழ்நகர் உரையில் தெரிவித்த கருத்துக்களை நோக்குவோம்.

பொறுப்புக்கூறல் விவகாரத்தை கையாளுவதற்கு அரசியல் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று முன்வைக்கப்படுகின்ற கோரிக்கையை ஆதரிக்கும் அவர் அத்தகைய கட்டமைப்பு தொடர்பில் தீர்மானத்தை எடுக்கின்றபோது சில உண்மைகளை விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியம் என்று கூறுகிறார்.

தற்போதைய சர்வதேச கட்டமைப்புக்களில் இலங்கை தமிழர்கள் பொறுப்புக்கூறலுக்காக அணுகக்கூடியதாக இருப்பது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மாத்திரமே என்று கூறும் பொன்னம்பலம் அந்த நீதிமன்றத்தினால் ஒரு அரசை அல்ல, தனிநபர்களையே விசாரணை செய்ய முடியும் என்பதை ஒத்துக் கொள்கின்ற அதேவேளை, ஒரு அரசை நீதிமன்றத்தில் நிறுத்தக்கூடிய கட்டமைப்பாக விளக்கும் சர்வதேச நீதிமன்றத்தில் ஒரு அரசினால் மாத்திரமே வழக்குத் தொடரமுடியும் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

றோம் சாசனத்தில் இலங்கை கைச்சாத்திடாவிட்டாலும் கூட சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைக்கு இலங்கையை உட்படுத்துவதற்கு மியன்மார் விவகாரத்தை உதாரணமாக அவர் காட்டுகிறார். சர்வதேச குற்றங்களுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக ஒரு அரசினால் இயலாமல் இருக்குமானால் அல்லது அந்த அரசுக்கு விருப்பமில்லாமல் இருக்குமானால் மாத்திரமே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் தலையீடுசெய்ய முடியும்.

மியன்மார் அரசு றொஹிங்கியா முஸ்லிம் மக்களுக்கு எதிராக இழைத்துவரும் கொடுமைகள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இருக்கும் வழக்குத் தொடுநர் அலுவலகமே முறைப்பாட்டைச் செய்து விசாரணை முன்னெடுக்கப்படுவதற்கு வழிவகுத்திருக்கிறது. மியன்மாரும் றோம் சாசனத்தில் கைச்சாத்திடவில்லை. ஆனால், மியன்மார் அரசின் கொடுமைகளில் இருந்து தப்பியோடி இலட்சக்கணக்கான றொஹிங்கியா மக்கள் தஞ்சமடைந்திருக்கும் பங்களாதேஷ் அந்த சாசனத்தில் கைச்சாத்திட்ட காரணத்தினால் அந்த மக்களுக்கு எதிரான வன்முறைகள் பங்களாதேஷிலும் இடம்பெற்றது என்ற அடிப்படையிலேயே சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அதன் நியாயதிக்கத்தைப் பயன்படுத்துகிறது.

றொஹிங்கியா மக்களுக்கு எதிராக மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களைச் செய்ததற்காக மியன்மார் இராணுவத் தலைவரைக் கைதுசெய்வதற்கான பிடியாணையைப் பிறப்பிக்குமாறு சர்வதேச குற்றவியல்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சகல சமூகங்களையும் அரவணைக்கும் அணுகுமுறை தேசிய நலனுக்கு அவசியமானது!



கலாநிதி ஜெகான் பெரேரா

உலகில் இன்று ஆட்சிமுறையிலும் வெளியார் என்று கருதப்படுபவர்கள் தொடர்பிலும் சகிப்புத்தன்மையின்மை பெருமளவுக்கு வெளிப்படுத்தப்படுகின்ற போக்கிற்கு மாறாக இலங்கை வேறுபட்ட ஒரு பாதையை எடுத்திருக்கிறது. சகல சமூகங்களையும் அரவணைக்கும் அணுகுமுறை ஒன்றை இலங்கை கடைப்பிடிக்கிறது. அது தேசிய நலனுக்கும் சர்வதேச ஆதரவை வென்றெடுப்பதற்கும் அவசியமானதாகும். அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை நடந்து கொண்ட முறை இதற்கு ஒரு உதாரணமாகும்.

இலங்கை தொடர்பான தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடுமாறு அரசாங்கம் கேட்கவில்லை. வாக்கெடுப் புக்கு விடுமாறு கேட்டிருந்தால் நாடுகளிடையே அது பிளவை ஏற்படுத்தியிருக்கும் என்பதுடன் மேற்குலக நாடு களுடன் இலங்கை பொருத வேண்டியும் வந்திருக்கும். அரசாங்கம் மோதலுக்கு பதிலாக ஒத்துழைப்பு அணுகு முறையைக் கடைப்பிடித்தது. அவ்வாறு செய்ததன் மூலமாக சர்வதேச ரீதியான பக்கத்தை எடுப்பதையும் மோதல் மற்றும் எதிர்ப்புக்கு பதிலாக ஊடாட்டத்தையும் பேச்சுவார்த்தையையும் விரும்புவதை சர்வதேச சமூகத்துக்கு இலங்கை உணர்த்தியிருக்கிறது.

இந்த தெரிவு சகல சமூகங்களையும் அரவணைத்துச் செல்லும் உள்நாட்டுக் கொள்கைக்கு இசைவானதாகும். இலங்கையில் சில சிறுபான்மைச் சமூகங்களை அந்நியர்களைப் போன்று நடத்தியதுடன் அவர்களை தேசத்துக்கு அச்சுறுத்தல்களாக அரசாங்கங்கள் நோக்கிய காலம் ஒன்று இருந்தது. இந்த போக்கு இலங்கை சுதந்திரமடைந்தகையோடு 1948 ஆம் ஆண்டில் இந்திய வம்சாவளி தமிழர்களின் (மலையகத் தமிழர்கள்) குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டதுடன் தொடக்கியது. முன்னர் எடுக்கப்பட்ட அத்தகைய கொள்கைத் தீர்மானங்கள் சமூகங்களுக்கு இடையில் அவநம்பிக்கையை ஏற்படுத்தியதுடன் நீண்டகால வன்முறைக்கான அடித்தளத்தை போட்ட பாதையில் இலங்கையைக் கொண்டுசென்றது.

ஆனால், இதற்கு மாறாக இனநெருக்கடி தொடர்பில் தற்போதைய அரசாங்கத்தின் நோக்கு இலங்கையின் ஒவ்வொரு குடிமகனும் சமத்துவமானவன் என்ற அடிப்படையிலும் பாகுபாடு அனுமதிக்கப்படமாட்டாது என்று உறுதிப்பாட்டின் அடிப்படையிலும் அமைந்திருக்கிறது. இன்று புறந்தள்ளலுக்கு அல்ல சகல மக்களும் தேசத்தில் சொந்தம் கொண்டாடும் சிந்தனையை விரிவுபடுத்துவதற்கே அழுத்தம் கொடுக்கப்படுகிறது. சகல சமூகங்களையும் தழுவியதாக இந்த கொள்கையை அரசாங்கம் பிரயோகிக்கிறது.

சமத்துவம், சகல தரப்புகளையும் அரவணைத்தல் மற்றும் பாகுபாடின்மை என்ற கோட்பாட்டை மாற்றுப்பாலின சமூகத்துக்கு பிரயோகிப்பதற்கும் அரசாங்கம் இப்போது திட்டமிடுகிறது. ஒரு சிறுபான்மையினராக இருக்கும் இந்த மாற்றுப்பாலின சமூகம் மிகவும் அண்மைக் காலங்களில் அவர்கள் பற்றிய தப்பபிப்பிராயங்களினாலும் பாகுபாடான கொள்கைகளினாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எல்லாக் காலத்திலும் அவ்வாறு இருந்ததில்லை. 1883 ஆம் ஆண்டில் பிரித்தானிய தண்டனைச் சட்டக்கோவை அறுமுகப்படுத்தப்பட்ட பின்னர் மாத்திரமே இலங்கையில் தன்னினச்சேர்க்கை சட்டரீதியாக தண்டனைக்குரிய குற்றமாக வந்தது.

காலனித்துவ யுகத்துக்கு முன்னதாக தாராளவாத பண்புகளைக் கொண்டதாக இலங்கை விளங்கியதை வரலாற்றுப் பதிவுகள் காட்டுகின்றன. அந்த பண்புகள் மீட்டெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். ஒரேபாலின உறவுகளை குற்றச்செயல்களாக கருதிய காலனித்துவ காலப்பகுதிக்குச் சொந்தமான பழமை வாய்ந்த சட்டங்களில் அரசாங்கம் திருத்தங்களைச் செய்யவேண்டும். பழமை வாய்ந்த அந்த சட்டங்களை பிரிட்டனே இப்போது கைவிட்டு விட்டது. இந்தியாவும் அதை ஒழித்துவிட்டது. உலகம் பூராவுமுள்ள மாற்றுப்பாலின சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வரவேற்கப்படுகிறார்கள் என்பதை அரசாங்கம் சுற்றுலாச் சபையின் ஊடாக அரசாங்கம் வெளிக்காட்டியிருக்கிறது.

### சிறுபான்மையினரை பாதுகாத்தல்

அதே போன்றே அரசாங்கம் நாட்டின் இன்னொரு சிறுபான்மைச் சமூகமான சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுட்டிருக்கிறது. வயது வந்தவர்களின் வல்லமையின் முன்னால் சக்தியற்றவர்களாக இருப்பதால் சிறுவர்களை ஒரு சிறுபான்மைச் சமூகமாக கருதமுடியும். தற்போது சிறுவர்கள், பெரும்பாலும் ஒழுக்கம், கட்டுபாபாடு என்ற பெயரில் தங்களுக்கு மூத்தவர்களினால் உடல் சார்ந்த தண்டனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அதிகாரத் துஷ்பிரயோகம் என்பது வன்முறைக் கலாசாரத்தில் வேர்விட்டதாகும். அது பிறகு பொலிஸ் சித்திரவதை மற்றும் பல்கலைக்கழக பகிடிவதையில் வெளிப்படுகிறது.

பாடசாலைகளில் உடல் சார்ந்த தண்டனை மீது தடை விதிக்கப்படுவதை பெரும்பாலான பெற்றோர்கள் வரவேற்பார்கள். அவர்களே ஒரு காலத்தில் அத்தகைய தண்டனையினால் பாதிக்கப்பட்ட அனுபவத்தையும் அதிகார துஷ்பிரயோகத்துக்கு வழிவகுக்கும் வல்லமைச் சமச்சீரின்மையின் அனுபவத்தையும் கொண்டவர்களாக இருப்பார்கள். பெற்றோராக இருந்தாலென்ன, ஆசிரியர்களாக இருந்தாலென்ன வயது வந்தவர்கள் சிறுவர்களுக்கு




**ஜெனீவாவில் திரும்பவும் கூறப்பட்ட நல்லிணக்க உறுதிமொழிகள் வடக்கு, கிழக்கிலும் நீதிக்காக காத்திருக்கும் ஒவ்வொரு சமூகத்திலும் பிரதிபலிக்க வேண்டும். இப்போது அரசாங்கம் செயலில் இறங்குமாக இருந்தால், அதனால் வெளிநாட்டில் நம்பகத்தன்மையை மீட்டெடுக்க முடியும் என்பது மாத்திரமல்ல, சகலரையும் அரவணைக்கும் அதன் அணுகுமுறையின் ஊடாக உள்நாட்டில் ஐக்கியத்தை மீளக்கட்டியெழுப்பக் கூடியதாகவும் இருக்கும்.**

எதிராக வன்முறையைப் பயன்படுத்தவது என்பது மிகவும் ஆரோக்கியமற்ற ஒரு நடைமுறையாகும். தங்களைத் தாங்களே பாதுகாக்க முடியாதவர்களாகவும் தங்களது வாழ்வாதாரத்துக்கு வயது வந்தவர்களில் தங்கியிருப்பவர்களாகவும் சிறுவர்கள் விளங்குகிறார்கள்.

மாற்றுப்பாலின சமூகம் தொடர்பிலும் சிறுவர்களின் பாதுகாப்பிலும் அரசாங்கம் வெளிக்காட்டுகின்ற பண்புகள் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் அதன் வாக்குறுதிகளுக்கு இசைவானதாகும்.

ஒன்றுக்கு ஒன்று இசைவுப் பொருத்தம் இல்லாத வாக்குறுதிகளை வழங்குவதற்கு பதிலாக, அரசாங்கத்தின் இந்த முயற்சிகள் நேர்மையிலும் சகலரையும் அரவணைக்கும் போக்கிலும் வேர்விட்ட ஆட்சிமுறை அணுகுமுறையை பிரதிபலிக்கின்றன. இனத்துவ மனக் குறைகளுக்கு தீர்வு காண்பது மாத்திரமல்ல, சமுதாயத்தில் நிலவுகின்ற அமைப்பு ரீதியான சமத்துவமின்மை மற்றும் ஒடுக்குமுறை கட்டமைப்புக்களை நிர்மூலம் செய்வதும் கூட தேசிய நல்லிணக்கத்தைப் பற்றியதே என்பதை அரசாங்கம் விளங்கிக்கொள்கிறது என்பதன் வெளிப்பாடாகவும் இது இருக்கிறது. சகல தரப்புகளையும் அரவணைப்பது என்பதை தனித்தனியாக பிரித்துப் பார்க்க முடியாது. ஜனநாயக அரசாங்கம் என்பது இனரீதியான, பால்ரீதியான அல்லது தலைமுறை ரீதியான சிறுபான்மையினர் சகலரையும் பாதுகாப்பதாக அமைய வேண்டியது அவசியம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அரசாங்கம் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நீண்டதாக பட்டியலிட்டிருக்கிறது. அதில் காணாமல் போனவர்களை கண்டுபிடித்தல் அல்லது அவர்களுக்கு நேர்ந்தது என்ன என்பதைப் பற்றிய உண்மையைக் கண்டறிதல், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்தல், அந்த சட்டத்தை நீக்குதல், பொதுமக்களின் காணிகளை திருப்பிக் கையளித்தல், வடக்கிலும் கிழக்கிலும் இராணுவமயத்தை நீக்கி, நீண்டகாலமாகத் தாமதிக்கப்பட்டுவரும் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதன் மூலம் அதிகாரப் பரவலாக்கத்தை மீண்டும் ஏற்படுத்துதல் ஆகியவை அடங்குகின்றன.

முன்னைய அரசாங்கங்கள் செய்ததைப் போன்று தற்போதைய அரசாங்கமும் நிராகரித்திருக்கும் 'இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தை' மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் தொடர்ந்தும் உள்ளடக்கியிருக் கிறது. இது ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் அமைந்திருக்கும் ஒரு பொறிமுறையாகும். இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் பற் றிய தகவல்களையும் தரவுகளையும் இது சேகரிக்கிறது.

இராணுவ சமர்களத்தில் பெரும் இரத்தக் களரியில் போர் முடிவுக்கு வந்ததற்கு பிறகு தேசிய அதிகாரிகளின் கைகளுக்கு அப்பால் செல்கின்ற பொறுப்புக்கூறலுக்கான கோரிக்கை மற்றும் போர்க்குற்ற விசாரணைகள் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களின அக்கறையாக இருந்து வந்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் பேரவையின் முன்னைய தீர்மானங்களில் கூறப் பட்டதைப் போன்று வெளிநாட்டு நீதிபதிகளுக்கான சர்வதேச கோரிக்கை அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத் தின் மூலமான நடவடிக்கை ஆகியவற்றை பற்றியதே இந்த விடயம்.

ஆனால், இந்த தடவை உள்நாட்டு மற்றும் தேசிய செயன்முறைகளின் ஊடாக நல்லிணக்கச் செயன்முறையை முன்னெடுப்பதில் தனக்கு இருக்கும் அக்கறை தொடர்பில் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுக்க அரசாங்கத்தினால் இயலுமாக இருந்திருக்கிறது போன்று தெரிகிறது. அரசாங்கத்தின் மாறாத அணுகுமுறை மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின் போது சர்வதேச சமூகத்துக்கு நம்பிக்கையை கொடுத்திருக்கிறது போன்று தோன்றுகிறது.

ஒட்டுமொத்தத்தில், மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம், வெளிநாட்டவர்களினால் அல்ல, இலங்கையர்களினாலேயே இறுதித் தீர்மானங்கள் எடுக்கப்படக் கூடியதாக - அரசாங்கம் உறுதியளித்ததைப் போன்று உள்நாட்டு அல்லது தேசிய பொறிமுறை ஊடாகவே நல்லிணக்கச் செயன்முறைகள் இடம்பெற வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறது. சர்வதேச சமூகத்தினால் வழங்கப்பட்ட முக்கியமான சலுகையே தீர்மானம் மீது வாக்கெடுப்பை இலங்கை கோராமல் விட்டதற்கான காரணமாக இருந்திருக்க வேண்டும்.

மோதல் தன்மையான ஒரு அணுகுமுறை உள்நாட்டில் கடும்போக்காளரை சாந்தப்படுத்தியிருக்கக்கூடும், ஆனால் அது சர்வதேச நல்லெண்ணத்தை வீணாக்கியிருக்கும். இலங்கை மீதான சர்வதேசத்தின் நல்லெண்ணம் இப்போதுதான் மீண்டு வந்துகொண்டிருக்கிறது. வாக்கெடுப்பை வலியுத்தாமல் இருக்க எடுத்த தீர்மானம் ஒரு பலவீனமான நடவடிக்கை அல்ல, மிகவும் விவேகமான ஒன்று. சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்படுவது தனக்கு கட்டுப்படியாகாது என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இது காட்டியது.

2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் ( அது தற்போதைய அரசாங்கத்தின் தவறு அல்ல) விளைவாக இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்தும் இடர்மிகுந்ததாகவே இருந்து வருகிறது. சனத்தொகையின் காற்பங்கினர் வறமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கினன்றனர். (2019 ஆண்டில் இருந்த நிலைமையை விடவும் இது இரண்டு மடங்காகும்.) அந்த பொருளாதார வீழ்ச்சி காரணமாக நாடு ஒரு தசாப்த கால அபிவிருத்தியை இழந்துவிட்டது. சகல தரப்புகளிடம் இருந்தும் பெறக்கூடிய சர்வதேச உதவி இலங்கைக்கு தேவைப்படுகிறது.

இலங்கை கடந்த காலத்தில் இருந்து தன்னை தீர்க்கமான முறையில் முறித்துக் கொள்ள வேண்டுமாக இருந்தால், அதற்கான சந்தர்ப்பம் இப்போது கிடைத்திருக்கிறது. அதை தாமதிக்காமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஜெனீவாவில் திரும்பவும் கூறப்பட்ட நல்லிணக்க உறுதிமொழிகள் வடக்கு, கிழக்கிலும் நீதிக்காக காத்திருக்கும் ஒவ்வொரு சமூகத்திலும் பிரதிபலிக்க வேண்டும். இப்போது அரசாங்கம் செயலில் இறங்குமாக இருந்தால், அதனால் வெளிநாட்டில் நம்பகத்தன்மையை மீட்டெடுக்க முடியும் என்பது மாத்திரமல்ல, சகலரையும் அரவணைக்கும் அதன் அணுகுமுறையின் ஊடாக உள்நாட்டில் ஐக்கியத்தை மீளக்கட்டியெழுப்பக் கூடியதாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொரிமாதோண்டியை நினைவூட்டும் மாகாண சபைகளுக்கான தேர்தல்!

**பனங்காட்டான்**

தமிழர்களின் அரசியல் முனைப்பை எப்போதும் பருவகால நிகழ்வாகப் பார்க்கலாம். அவ்வப்போது எது பேசுபொருளாக இருக்கிறதோ அதனை ஒட்டியதாக, போட்டி போட்டுக் கொண்டு கூட்டங்களும் அறிக்கைகளும் எதிர்வினைகளும் வரும்.

சில வாரங்களுக்கு முன்னராக செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி விவகாரம் பரபரப்பானதாக இருந்தது. புதைகுழியை தொடர்ந்து தோண்டுவதற்கு நிதி கிடைக்கவில்லையென பல செய்திகள் வந்தன. நிதி கிடைத்ததும் மழை காலம் அதற்கு விரோதியாக அமைந் ததால் இனி நவம்பர் மாதத்தின் பின்னரே இதற்கு முக்கியத்துவம் கிடைக்கும்.

கடந்த சில வாரங்களாக ஜெனிவா மனித உரிமை கூட்டத்தொடர் பேசப்பட்டது. தமிழர் தரப்பு அங்கு உருப்படியாக எதனையும் செய்யவில்லை. தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற குழுத்தலைவர் சிவஞானம் சிறீதரன் கட்சியின் பிரதிநிதியாக ஜெனிவா சென்றாரா அல்லது தனிப்பட்ட முறையில் சென்றாரா என்ற கருத்தரங்கு ஒரு வாரமாக ஓடியது.

இப்போது மாகாண சபைகளுக்கான தேர்தல் பிரபல்யமாகி நிற்கிறது. தேர்தல் நடைபெறுமா நடைபெறாதா என்பது யாருக்கும் தெரியாது. லஞ்சம், ஊழல், போதை ஒழிப்பை தெற்குக்கு காட்டும் அநுர குமர அரசு, தமிழருக்கு மாகாண சபையைக் காட்டுகிறது. எப்பொழுதுமே தேர்தல் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு அது நடைபெறும் என்று கூறி விட்டால், அவர்கள் அவர்களுக்குள்ளேயே அடிபட்டுக் கொள்வார்கள் என்ற நண்டுச் சித்தாந்தத்தை புரிந்து கொண்ட சிங்கள தேசம் அதனை கையாண்டுள்ளது.

மாகாண சபைக்கான தேர்தல் நிச்சயம் நடைபெறும், அடுத்தாண்டு நடைபெறும், மார்ச் மாதத்துக்குப் பின்னர் நடைபெறும், எந்த அடிப்படையில் நடைபெறும் என்று தீர்மானிக்கப்பட்ட பின்னர் நடைபெறும் என்று பலவாறான செய்திகள் திட்டமிட்டு அரச தரப்பால் பரப்பப்படுகிறது. முக்கியமாக அவர்களின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் ஊடாகவே இந்தப் பரப்புரை இடம்பெறுகிறது.

அவ்வப்போது வெளிவரும் செய்திகளை படிக்கும்போது மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறுமென்ற நம்பிக்கை அதிகரிக்கிறது. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் தமிழ் அரசியல் கட்சிகள் தனித்தும் கூட்டாகவும் தங்கள் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன. அண்மையில் டான் தொலைக்காட்சியில் தமிழ் அரசியல் பரப்பில் நன்கறியப்பட்ட வரதராஜப்பெருமாள், வடமாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராஜா, தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த காண்டீபன் ஆகியோர் இது தொடர்பான கருத்தாடலில் பங்குபற்றியிருந்தனர்.

தமிழ் ஊடகங்களும் இத்தேர்தலுக்குத் தயாராகி வருவதுபோல செய்திகளையும் விமர்சனங்களையும் அவதானிக்க முடிகிறது. கொள்கைக் கூட்டாக கஜேந்திரகுமாருடன் இணைந்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினர் தங்களுக்குள் இது தொடர்பாக ஒரு சந்திப்பை கடந்த வாரம் நடத்தியிருந்தனர். இதன் பின்னர் இக்குழுவைச் சேர்ந்த பிரேமச்சந்திரன் தெரிவித்த கருத்து கஜேந்திரகுமார் தலைமையிலான கொள்கைக் கூட்டை விட்டு வெளியேறுவது போல காணப்பட்டது.

அதேசமயம், தங்களின் கூட்டத்துக்கு தமிழரசு கட்சியையும் அழைத்ததாகவும் சுகயீனம் காரணமாக சுமந்திரன் பங்குபற்றவில்லையெனவும் ஒரு செய்தி வெளியானது. இது உண்மையாக இருக்குமாயின், கட்சியின் பதில் தலைவரான சி.வி.கே. சிவஞானம் இதில் பங்குபற்றியிருக்கலாம். 'தமிழரசு கட்சியே பெரிய கட்சி. மற்றைய கட்சிகள் எங்களுடன் இணையலாம். நாங்கள் அவர்கள் எவருடனும் இணையத் தேவையில்லை" என்று முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் சுமந்திரன் சொன்னதை இப்போது ஞாபகப்படுத்தின் இதற்குரிய பதில் அடங்கும்.

> 'மாகாணசபை தேர்தலை நடத்துவதற்காக ஏற்கனவே உள்ள சட்டம் ரத்துச் செய்யப்பட்டு அதன் இடத்துக்கு தயாரிக்கப்பட்ட புதிய சட்டத்தொகுப்பு 2018 முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் நாடாளுமன்றமே ஒரு முடிவை எடுக்க வேண்டும். எல்லை நிர்ணயம் 2018ல் வழங்கப்பட்ட 50:50 கலப்பு விகிசார பிரதிநிதித்துவ முறையின் ஒருங்கிணைந்த பகுதி. அதன் பணிகள் முடிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், இதற்குப் பொறுப்பான அமைச்சர் உட்பட முழு நாடாளுமன்றமும் அதனை எதிர்த்தது. இதனால் சட்டம் இன்னும் நிறைவேறாததால் மாகாண சபை தேர்தல் பாதிக்கப்பட்டுள்ளது" - இது தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் அறிவித்தல்.




1987ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும், ராஜிவ் காந்தியும் செய்து கொண்ட ஒப்பந்தத்தால் பிரசவமான மாகாண சபை முறைமை தமிழருடைய அரசியல் பிரச்சனை தீர்வுக்கானது என சொல்லப்பட்டது. அப்போது, தமிழ் காங்கிரஸ் தவிர மற்றைய அனைத்துக் கட்சிகளும் கூட்டமைப்பு என்ற பெயரில் ஒரு குடையின் கீழ் இருந்தன. கடந்த முப்பத்தெட்டு ஆண்டுகளில் ஒரேயொரு தடவை மட்டுமே வடமாகாண சபைக்கு தேர்தல் இடம்பெற்றது. முப்பத்தெட்டு ஆசனங்களில் முப்பதை இலகுவாக கூட்டமைப்பு பெற்றுக்கொண்டது. கூட்டமைப்பின் தலைமைக் கட்சியான தமிழரசு சார்பில் இனிவரும் தேர்தலில் முதலமைச்சர் பதவிக்கு தாம் போட்டியிடவுள்ள விருப்பத்தை சுமந்திரன் ஏற்கனவே அறிவித்துள்ளார். கட்சி இன்று அவரது கட்டுப்பாட்டில் இருப்பதால் அவரே இப்பதவிக்கு போட்டியிட முடியும்.

மாகாண சபை முறைமையை இந்திய தரப்பு இப்போது பட்டும்படாமலும் கையாளுகிறது. மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டுமென வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கேட்டு வருவதை இந்தியா தனது பொழுதுபோக்காக எடுத்துள்ளது. ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைப் பேரவையின் கூட்டத்திலும் இந்தியா இதனை தெரிவித்தது. தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உரையாடும்போது இதனை வேறு விதமாகக் கையாள்கிறது. மாகாண சபையிலுள்ள அதிகாரங்களை முதலில் முழுமையாக பயன்படுத்துங்கள் என்பதும், தமிழர் தரப்பு ஒன்றுபட்டு ஒரு குரலில் வருவதில்லையென்பதும் இந்தியாவின் வாய்ப்பாடு.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்ட முக்கிய காலமான 1988 முதல் 1990 வரை கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் முதலாவது செயலாளராக இருந்தவர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர். இவரது இணையத்தள தகவலின்படி இந்திய அமைதி காக்கும் படைக்கும் இவரே ஆலோசகராக இருந்துள்ளார். தற்போது இவர் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சராகவுள்ளார். இந்தப் பின்னணியில் பார்க்கையில் 13ம் திருத்தத்தையும் மாகாண சபை முறைமையையும் நன்கறிந்த இவரால் இலங்கை அரசுடன் ராஜதந்திர ரீதியாக இதனைக் கையாள முடியும். எப்போதுமே தமிழர் தரப்பை சந்திக்கும்போது இருப்பதை சரியாகப் பயன்படுத்துங்கள் என்று சொல்வதே தமது கடமை என இவர் நினைக்கிறார்.

அநுர குமர அரசின் பிரதமர் ஹரிணி அமரசூரிய சீன விஜயத்தை முடித்துக் கொண்டு இந்தியா சென்று நாடு திரும்பியுள்ளார். இந்திய பிரதமர் மோடியையும் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரையும் இவர் தனித்தனியாக சந்தித்து உரையாடியுள்ளார். வெளிவந்துள்ள செய்திகளின்படி இச்சந்திப்புகளின் போது இலங்கையின் கல்வி அபிவிருத்தி உட்பட பல்வேறு உதவிகளை வழங்குவதே இங்கு பேசப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தமது பதவி வழியாக இலங்கை-இந்திய ஒப்பந்த அமுலாக்கல் பற்றி பேசும் உரிமை உடையவர். ஆனால் அதனை தவிர்த்து விட்டார்.

சமவேளையில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா கடந்த 13ம் திகதி ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவை பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. அலுவலகத்தில் சந்தித்து உரையாடியுள்ளார். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவு, அபிவிருத்தி உதவிகள் பற்றியே இங்கு பேசப்பட்டுள்ளது. கடந்த பெப்ரவரி மாதத்திலும் இருவரும் சந்தித்துப் பேசியபோது காற்றாலை தொடர்பாகவும், பொருளாதார அபிவிருத்தி பற்றியும் பேசப்பட்டது. ரில்வின் சில்வா ஆட்சியில் எந்த அமைச்சர் பதவியும் வகிக்கவில்லை. ஆனாலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மூக்கணாங்கயிறாக ரில்வின் சில்வாவே இருக்கிறார் என்பதை நிச்சயப்படுத்தியதாலேயே இந்தச் சந்திப்புகள் இடம்பெறுகின்றன. எனினும், தமிழருக்கான அரசியல் தீர்வு, மாகாண சபைத் தேர்தல்கள் பற்றி மறந்தும்கூட இவர்கள் பேசுவதில்லை.

ஊடகங்கள் வழியாக மாகாண சபைத் தேர்தலை வெளிப்படுத்தி வரும் இலங்கை அரசு இதுபற்றி எந்தத் தகவலையும் இந்திய அரசுக்கு இது வரை பகிர்ந்ததாகத் தெரியவில்லை. இதனூடாக ஒரு விடயத்தை அது என்னவென்று இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

அதேசமயம், மாகாண சபை தேர்தல் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க கடந்த வாரம் மிக மிக முக்கியமான விடய மொன்றை தெரிவித்துள்ளார். மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்த இப்போது நாட்டில் எந்தச் சட்டமும் இல்லையென்று பகிரங்கமாகவே கூறி யுள்ளார். இதனை பின்வருமாறு அவர் விளக்கியுள்ளார்:

'மாகாண சபை தேர்தலை நடத்துவதற்காக ஏற்கனவே உள்ள சட்டம் ரத்துச் செய்யப்பட்டு அதன் இடத்துக்கு தயாரிக்கப்பட்ட புதிய சட்டத்தொகுப்பு 2018 முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இதற்கு நாடாளுமன்றமே முழுப்பொறுப்பு. இந்த விடயத்தில் நாடாளுமன்றமே ஒரு முடிவை எடுக்க வேண்டும். எல்லை நிர்ணயம் 2018ல் வழங்கப்பட்ட 50:50 கலப்பு விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் ஒருங்கிணைந்த பகுதி அதன் பணிகள் முடிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், இதற்குப் பொறுப்பான அமைச்சர் உட்பட முழு நாடாளுமன்றமும் அதனை எதிர்த்தது. இதனால் சட்டம் இன்னும் நிறைவேறாததால் மாகாண சபை தேர்தல் பாதிக்கப்பட்டுள்ளது" என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

யதார்த்தம் இப்படி இருக்கையில், மாகாண சபை தேர்தலுக்கு தமிழர் தரப்பு தலைப்பாகை கட்டி, பூமாலை சூட்டி ஆயத்தப்படுவதைப் பார்க்கும்போது பொரிமாதோண்டியின் கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறைகளில் நிற்கவேண்டிய ஆசிரியர்கள் ஏன் நடுத்தெருவில் நிற்கிறார்கள்?

கந்தையா அருந்தவபாலன்

அரச துறைகளில் பணியாளர்களின் தொழில் நிலைய இடமாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. ஒப்பீட்டு ரீதியில் ஏனைய துறைகளிலுள்ள பணியாளர்களைவிட ஆசியர்களுக்கான இடமாற்றங்கள் அவர்களுக்கு வாய்ப்பானவை. நியமனத் தொடக்கத்தில் அல்லது ஒருமுறை வெளிமாவட்டங்களில் பணியாற்றிய பின்னர் அவர்களின் நிரந்தர வசிப்பிடங்களிலிருந்து கிட்டிய தூரங்களிலுள்ள பாடசாலைகளில் குறிப்பாக அந்தந்த வலயப்பாடசாலைகளுக்குள்ளேயே பணியிட மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. இம்முறை தேசியப் பாடசாலைகளைப் பொறுத்து சற்று வேறுபடலாம். ஒரு வைத்தியரை அல்லது நிர்வாக அதிகாரியைப் போல ஐம்பது வயதிலும் வேறு மாவட்டங்களுக்கு பணியிடம் மாற்றப்படும் நிலை ஆசிரியர்களுக்கோ அதிபர்களுக்கோ இல்லை. பணியிடங்களும் பணியாளர்களும் அதாவது பாடசாலைகளும் ஆசிரியர்களும் அதிகமாக இருப்பது இதற்கான பிரதான காரணம். அப்படியிருந்தும் வருடாந்த இடமாற்றங்களின் போது ஆசிரியர்கள் தரப்பிலிருந்தே விமர்சனங்களும் போராட்டங்களும் அதிகளவில் தோன்றுகின்றன. அந்தவகையில் வழமைபோல தமக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்களை எதிர்த்து இந்த ஆண்டும் ஆசிரியர்கள் பலர் வீதிக்கு இறங்கியுள்ளனர். அதற்கு ஆதரவாகவும் எதிராகவும் தொழிற்சங்கங்கள் அறிக்கைப் போரில் இறங்கியுள்ளன. அதிகாரிகளும் தங்கள் பங்குக்கு கலந்துரையாடல்களை நடத்துவதுடன் கருத்துகளையும் தெரிவிக்கின்றனர். ஆனால் பிரச்சினைகள் தீர்வின்றித் தொடரவே செய்கின்றன.

தொடரும் இப்பிரச்சினைகளுக்கு தற்போது ஊடகங்களில் முதன்மைப்படுத்தப்படுபவை மட்டும்தானா மூல காரணங்கள்? அல்லது இப்பிரச்சினைகளுக்கு வேறு கார ணங்களும் உள்ளனவா?

ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்சினைகளுக்கு அடிப்படையான பல காரணிகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவையாக பின்வருவன உள்ளன.

* ஆசிரிய நியமனங்களும் பிரதேச விருத்தி வேறுபாடுகளும்.
* பொருத்தமான கொள்கை இல்லாமை.
* நிர்வாக ரீதியான குறைபாடுகளும் வெளிப்படைத் தன்மை இன்மையும்
* ஆசிரியர்களின் இயல்பான மனநிலை.
* அரசியல் மற்றும் அதிகாரிகளின் தலையீடுகள்
* தொழிற்சங்கங்களின் தலையீடுகள்
* கூட்டுக் குடும்பங்களின் சிதைவும் கருக்குடும்பங்களின் பெருக்கமும்

இக்காரணிகளை வடக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குவது பொருத்தமாக இருக்கும். ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்சினை என்பது அடிப்படையில் வடக்கின் பிரதேச விருத்திநிலை வேறுபாடும் அதனடிப்படையில் ஏற்படும் நியமன எண்ணிக்கை வேறபடுதலும் ஆகும். வடக்கு மாகாணத்தில் எல்லா மாவட்டங்களும் சீரான வளர்ச்சி பெற்றவையல்ல. ஒப்பீட்டு ரீதியில் யாழ்ப்பாண மாவட்டத்தின் வளர்ச்சி உயர்வானது. இம்மாவட்டத்திலும் தீவகம், வடமராட்சி கிழக்கு ஒப்பீட்டிரீதியில் பின்தங்கிய தூரப் பிரதேசங்கள். ஏனைய மாவட்டங்களைப் பொறுத்து அவற்றின் பிரதான நகரங்கள் ஓரளவு வளர்ச்சி பெற்றுள்ளன. ஆனால் உள்ளூர் கிராமங்களின் வளர்ச்சி ஒப்பீட்டு ரீதியில் மிகவும் தாழ்வானது. இது வடக்குக்கு மட்டுமல்ல இலங்கைக்கே பொதுவான ஒரு பண்புதான். இதனால் வளர்ந்த யாழ் மாவட்டத்திலும் ஏனைய மாவட்டங்களின் நகரங்களிலும் கல்வி, தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கான வளங்கள் கூடுதலாக உள்ளன. இதனால் ஆசிரிய நியமனங்களின் போது இப்பிரதேசங்களிலிருந்தே அதிகளவு ஆசிரியர்கள் உள்வாங்கப்படுகின்றனர். ஏனைய பரந்த பிரதேசங்களிலிருந்து உள்வாங்கப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. எனவே கூடிய நியமனங்கள் கிடைக்கும் இடங்களிலிருந்து பற்றாக்குறையான பிரதேசப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இடமாற்றப்படுவது தவிர்க்க முடியாதது. பிரதேச விருத்தி நிலையில் காணப்படும் ஏற்றத்தாழ்வு ஆசிரிய இடமாற்றத்துக்கான காரணியாக இருப்பது மட்டுமல்ல அதுவே இடமாற்றத்தை ஆசிரியர்கள் ஏற்கத்தயங்குவதற்கான காரணியாகவும் அமைந்துவிடுகிறது.

மேற்குறித்தவாறு ஆசிரியர் இடமாற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கும் நிலையில் அதனை பிரச்சினைகளின்றி அல்லது பிரச்சினைகளை இழிவாக்கி வினைத்திறனுடன் செய்வதற்குப் பொதுவான, பொருத்தமான, நிரந்தரமான, வெளிப்படையான கொள்கை ஒன்று பின்பற்றப்படுதல் அவசியம். ஏனெனில் இது மாணவர்களின் கல்வியுடன் மட்டுமல்ல ஆசிரியர்களின் வாழ்க்கையுடனும் தொடர்புபட்ட ஒன்று. தேவைக்கேற்ப ஆசிரிய தொழிற்சங்கங்களின் இசைவுடன் சிறிய மாறங்களைச் செய்யமுடியும். அதைவிடுத்து நிரந்தரமான ஒரு கொள்கையின்றி அடிக்கடி இடமாற்றத்துக்கான நியமங்களை மாற்றுவதும் அதிகாரிகள் தமது விருப்பத்துக்கேற்ப தீர்மானங்களை மேற்கொள்வதும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கவே செய்யும். வடக்கில் இடமாற்றப் பிரச்சினைகளுக்கு இதுவும் ஒரு காரணம். கொள்கையடிப்படையில் இடமாற்றங்களை வழங்குவது மட்டுமல்ல வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதத்தில் குறிப்பிட்டவாறு குறித்த ஆசிரியர்கள் குறித்த திகதியில் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கும் வகைசெய்யப்படுதல் அவசியம். மூன்று ஆண்டுகள் வெளிமாவட்டச் சேவை எனக்குறித்து இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் ஆறு, ஏழு வருடங்களாக திரும்பி வரமுடியாமல் இருக்கும் நிலை காணப்படுமானால் வழங்கப்படும் இடமாற்றத்தை அவர்கள் நிராகரிக்கவே முயல்வர்.



மாணவர்கள் இல்லையெனில் ஆசிரியர்களுக்கும் வேலையில்லை. அதிகாரிகளுக்கும் வேலையில்லை. ஆனால் அந்த உண்மையை மறந்து ஒவ்வொரு தரப்பும் தாங்கள் இல்லையென்றால் கல்வித்துறையே இல்லையென்று செயற்படுவதே பெரும்பாலான பிரச்சினைகள் உருவாகக் காரணமாகின்றன.

ஆசிரியர்கள் தொடர்பான போதிய தரவுகளைப் பேணாமை, தரவுகள் இற்றைப்படுத்தப்படாமை, தரவுகளின் அடிப்படையில் தீர்மானம் எடுக்காமை, தீர்மானம் எடுப்பதில் போதிய கவனமின்மை போன்றனவும் இடமாற்றப் பிரச்சினைகளை கூர்மையடையச் செய்கின்றன. சிலர் இடமாற்றமின்றி பலவருடங்கள் இருப்பதற்கும் வேறுசிலர் தொடர்ந்து பந்தாடப்படுவதற்கும் இக்காரணிகளும் வழிவகுக்கின்றன. ஏலவே அதிபர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டு இரண்டு வருடங்கள் கழிந்த ஆசியர் ஒருவருக்கும் வெளிமாவட்ட இடமாற்றம் வழங்கப்பட்டது இக்குறைபாடுகளினால்தான். அதுமட்டுமல்ல ஆறு ஆண்டுகள் வெளிமாவட்ட சேவையை முடித்துவரும் ஒரு ஆசியருக்கு மீண்டும் தீவகமோ அன்றி கட்டைக்காடோ போ என்று சொல்வதும் நிர்வாகச் சீரின்மைதான். அதுவும் பக்கத்து வீட்டு ஆசிரியை வெளிமாவட்டமும் செல்லாது தீவகமும் செல்லாது நகரின் பிரபல பாடசாலையில் தொடர்ந்து இருக்கும்போது தன்னை மீண்டும் தீவகம் செல்லுமாறு பணிப்பதை அந்த ஆசிரியர் எவ்வாறு தாங்குவது? ஏனைய மாகாணங்களை விட வடக்கு மாகாணத்தில்தான் ஆசிரிய மாணவ விகிதம் குறைவாக உள்ளது. நாட்டின் ஓராசிரியருக்கான சராசரி மாணவர் விகிதம் 16.3 ஆக இருக்க வடக்கு மாகாணம் 12. யாழ்ப்பாணம் 11. அதேவேளை கொழும்பு 19, காலி 18. இதன்கருத்து ஒப்பீட்டு ரீதியில் ஆசிரியர் எண்ணிக்கை வடக்கில் உயர்வானது என்பதாகும். மாணவர்கள் எண்ணிக்கை குறைந்த பாடசாலைகள் அதிகம் இருப்பது இதற்கு ஒரு காரணமென்றாலும் போதிய ஆசிரியர்கள் வடக்கில் இருக்கும் போது பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதெனில் வினைத்திறனற்ற நிர்வாகமும் அதற்கு ஒரு காரணம்.

கல்வித்துறையில் இடமாற்றங்கள் மட்டுமன்றி பதவியுயர்வு உட்பட சகல விடயங்களும் வெளிப்படைத் தன்மையாக இருப்பதுடன் நியாப்பாடாகவும் இருக்கவேண்டும். வெளிப்படைத்தன்மை மாற்றங்களை ஏற்பதற்கான மனநிலையை சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்படுத்துவது மட்டுமன்றி அவர்கள்மீதான சமூக அழுத்தத்தையும் உருவாக்கும். மறுபுறத்தில் வெளிப்படைத்தன்மையின்மை சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமன்றி சமூகத்துக்கும் ஐயத்தைத் தோற்றிவிப்பதுடன் முறைகேடுகளுக்கும் வழிவகுக்கும். வடக்கு மாகாணத்தில் சுமார் 18000 ஆசிரியர்கள் உள்ளனர். அவர்களின் சகல தரவுகளையும் குறிப்பாக வெளிமாவட்ட சேவை, தவிர்த்திருந்தால் அதற்கான நியாயமான காரணம் உட்பட அனைவரும் பெறக்கூடிய நிலைமை உருவாக்கப்படுமானால் முறைகேடுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அகலும். தனக்கான இடமாற்றம் நியாயமானது என ஆசிரியர் தானாக உணரும் நிலையும் ஏற்படும். ஏனெனில் ஆசிரியர்கள் பலர் பல்வேறு செல்வாக்குகளைப் பயன்படுத்தி எந்தவித இடமாற்றங்களுமின்றி இருக்கும்போது இன்னொரு ஆசிரியர் தனக்கு வழங்கும் இடமாற்றத்தை ஏற்பதற்குப் பதிலாக அதனைக் கேள்விக்குட்படுத்தவே முயல்வார். அதனைத் தவறென்று கூறமுடியாது. வேறு மாகாணங்களில் மட்டுமன்றி வடக்கு மாகாணத்திலும் வேறு சில திணைக்களங்கள் இதனை முறையாகப் பேணிவர முடியுமானால் கல்வித்திணைக்களத்தால் மட்டும் ஏன் அது சாத்தியமாகாது.

அடுத்தது ஆசிரியர்களின் மனநிலை. இதனை மனித இயல்பு என்றும் கூறிக்கொள்ளலாம். வேலை கிடைக்கு மட்டும் எங்கென்றாலும் வேலை செய்யத் தயாராக இருக்கும் மனநிலை வேலை கிடைத்தபின் பக்கத்தைப் பாடசாலையைத் தேடும். அதேபோல வெளிமாவட்டத்துக்குப் போவதைத் தவிர்ப்பதற்கான நியாயங்களைத் தேடும். ஒரு வட்டத்துக்குள் உருவாக்கப்பட்ட வாழ்க்கை முறையிலிருந்து மாறத் தயங்குதல், வசதிகளை இழக்கத் தயங்குதல், சிரமங்களைத் தவிர்க்க முயற்சித்தல் போன்ற பல காரணிகள் பணியிட மாற்றத்துக்கு எதிர்வினைகளைத் தூண்டும். புதிய நோய்கள் தனக்கோ அன்றி குடும்ப உறுப்பினர்களுக்கோ வரும், புதிய பொறுப்புகள் உருவாகும், இதுவரை திரும்பியே பார்க்காத பெற்றோர்களை பராமரிக்க இப்போது தன்னை விட்டால் வேறு யாருமற்ற நிலை வரும். இப்படி இத்தியாதி இத்தியாதி காரணங்கள் இடமாற்றச் செய்தியுடன் பல ஆசிரியர்களுக்கு வரும். இவற்றை சான்றுப்படுத்துவதற்கான வைத்தியர்களும் அதிகாரிகளும் தாராளமாக இருப்பர். நியாயமான இடமாற்றத்தை எதிர்க்கும் அல்லது வேறுவழிகளில் அதை மாற்ற முயற்சிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் சிந்திக்கவேண்டிய விடயங்கள் பலவுண்டு. இவ்வாறு ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு போலியான அல்லது தவிர்க்கக் கூடிய காரணங்களைக் கூறினால் நிர்வாகிகள் என்ன செய்வது? உண்மையான பாதிப்புடைய ஆசிரியர்கள் இதனால் பாதிக்கப்படமாட்டார்களா? செல்வாக்குள்ளவர் இடமாற்றத்தை இரத்துச் செயவிக்கும்போது மற்றவர்கள் எவ்வாறு அதை ஏற்றுக் கொள்வார்கள்? பிரச்சினைகள் யாருக்கில்லை? எல்லோருக்கும் ஏதோவொரு வகையான பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றுக்கு மாற்று வழியைக் காணவேண்டியது நமது கடமையல்லவா? கூழும் குடிக்கவேணும் அது மீசையிலும் படக்கூடாது என்ற நிலைப்பாட்டை மாற்ற முயற்சிக்க வேண்டும்.

இன்றைய குடும்ப வாழ்க்கை முறையும் ஆசிரியர்கள் இடமாற்றத்தை எதிர்க்க ஏண்டிய சூழலையை ஏற்படுத்துகிறது. முன்பு கூட்டுக்குடும்பமாக இருந்தபோது ஒருவர் செய்வேண்டிய காரியங்களை பொறுப்பெடுப்பதற்குப் பலர் இருந்தனர். ஆனால் இன்று கருக்குடும்பங்களாக மாறிவிட்டதால் ஒருவரின் பணியை அவரே செய்யவேண்டிய கட்டாயநிலை. முன்னைய காலத்தில் அரச பணியாளருக்கு இடமாற்றம் என்றால் அவரது குடும்பமே பணியிடத்துக்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்துவிடும். அப்பணியாளரின் பிள்ளைகள் கல்வி கற்ற பாடசாலைகளின் பட்டியல் நீண்டிருக்கும். ஆனால் இன்றைய பணியாளர்கள்அதை விரும்புவதில்லை. அவர்களால் முடிவதுமில்லை. எவ்வளவு தூரமானாலும் காலையில் பணிக்குச் சென்று மாலையில் சொந்த வீடுதிரும்பவே விரும்புகின்றனர். இதன்காரணமாக பிரதான வழித்தடங்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகளுக்கு முண்டியடிக்கின்றனர். அதனால் அந்த பாடசாலைகளில் ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்க இடமாற்றத்தின் பின்னரும் உள்ளூர் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்கிறது. பின்தங்கிய கிராமமொன்றில் ஆசியரில்லாத பாடசாலையொன்றில் படிக்கும் பிள்ளையொன்றின் தாயாக அல்லது தந்தையாக ஒவ்வொரு ஆசிரியரும் தன்னை நினைத்துக்கொண்டால் மலைபோன்ற பிரச்னைகளும் வெறும் தூசாக மாறிவிடும். ஆசிரிய நியமனத்துக்கு பொதுப்பரீட்சை ஒன்றை வைத்து, இடமாற்றப் பிரச்சினையைக் குறைப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு கூடிய வெட்டுப்புள்ளியும் கிளிநொச்சிக்கு குறைந்த வெட்டுப் புள்ளியும் அல்லது கிளிநொச்சி நகருக்கு கூடிய

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்து விடப்படும் முதியவர்கள்



நிலாந்தன்

புலம்பெயர்ந்த தமிழர் ஒருவர் அண்மையில் ஊருக்கு வந்திருந்தார். அவருடைய ஊரில் அவருக்குத் தூரத்து உறவான ஒரு முதிய பெண் தனித்து வசிக்கிறார்.பெரிய வீடுவசதியான குடும்பம். ஆனால் பிள்ளைகள் இல்லை. காசு உண்டு. ஆனால் பராமரிக்க ஆளில்லை. அவருடைய வீட்டுக்கு அருகில் உள்ள ஒரு படை முகாமில் இருப்பவர்கள் அவருக்குச் சாப்பாடு கொடுக்கிறார்கள். ஆனால் அவர் பல நாட்கள் குளித்திருக்கவில்லை என்றும் அவருடைய சுத்தம் சுகாதாரத்தைத் தொடர்ச்சியாகக் கவனிப்பதற்கு அங்கே ஆட்கள் இல்லையென்றும் நண்பர் சொன்னார். அப்படியென்றால் அவரை அழைத்துக் கொண்டு வந்து ஒன்றில் அரச முதியோர் இல்லத்தில் சேர்க்கலாம் அல்லது கட்டணத்தோடு முதியோரைப் பராமரிக்கும் இல்லங்களில் இணைக்கலாம்.போதியளவு பணம் இருந்தாலும் பராமரிக்க ஆளில்லாமல் தவிக்கும் முதியோரை கட்டணம் பெற்றுக்கொண்டு பராமரிக்கும் இல்லங்களில் சேர்க்கலாம். எனவே அந்த முதிய பெண்ணை ஏதாவது ஒரு முதியோர் இல்லத்தில் இணைத்தால் என்ன என்று நண்பரிடம் கேட்டேன்.

அதற்கு நண்பர் சொன்னார், குறிப்பிட்ட மூதாட்டிக்கு 80 வயதுக்கு மேலாகிறது. இனி அவர் தனது வீட்டிலிருந்து வேரைப் பிடுங்கிக்கொண்டு வேறொரு இடத்துக்கு வரத் தயாராக இல்லை. எல்லாவிதமான அசௌகரியங்கள், பற்றாக் குறைகளோடும் தான்

பிறந்து, வளர்ந்து, திருமணம்செய்து சந்தோஷமாக வாழ்ந்த அந்த வீட்டிலேயே இருந்து இறந்து போகத்தான் விரும்புவார் என்று தோன்றுகிறது. அவரை இந்த வயதில் வேரை அறுத்துக் கொண்டு வெளியே எடுப்பது சாத்தியமா? என்று.

அது சாத்தியமா இல்லையா என்பதல்ல பிரச்சினை. அவருடைய 'குவாலிட்டி ஒஃப் லைஃப்' - வாழ்க்கைத் தரம் உயர்வானதா? என்பதுதான் இங்கு பிரச்சனை. அவரைப் போன்ற பல முதியவர்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த ஊரை விட்டு வெளியே வரத் தயாராக இல்லை. தாங்கள் பிறந்து வளர்ந்த அந்த வீட்டுக்குள் எல்லா விதமான பற்றாக்குறைகளோடும் ஆபத்துக்குகளோடும் சீவிப்பதில் அவர்கள் மன நிறைவடைகிறார்கள். இங்கே அடிப்படைக் கேள்வி ஒன்று

எழுதுகிறது. "குவாலிட்டி ஒஃப் லைஃப்" என்பது மனதால் அவர்கள் மகிழ்ச்சியாக

இருப்பதா? அல்லது உடலால் நவீன மருத்துவத் தராதரங்களுக்கு ஏற்ப

பராமரிக்கப்படுகிறவர்களாக இருப்பதா? எனக்குத் தெரிந்த பல முதியவர்கள் குறிப்பாக 80 வயதுக்கு மேலானவர்கள் தாம் பிறந்து வளர்ந்த வீட்டிலேயே இருந்து சாவதைத்தான் தமது வாழ்க்கை தரத்தில் உயர்ந்த நிலை என்று கருதுவதாகத் தெரிகிறது.

ஆனால் பராமரிப்பின்றி தனிமையில் உழல்வதை விடவும் முதியோர் இல்லங்களில் சக வயதினரோடு இருப்பது சந்தோஷமானது என்று கருதும் முதியோரும் உண்டு. ஓர் ஆசிரியை வெளிநாட்டுக்குப் போகும்போது தன் தகப்பனை அரசு முதியோர் இல்லத்தில் இணைத்துவிட்டுச் சென்றார். நாடு திரும்பியதும் தகப்பனை வீட்டுக்கு அழைத்து வரச் சென்ற போது தகப்பன் மறுத்துவிட்டார். இங்கே எனது வயதொத்தவர்களோடு சந்தோஷமாக இருக்கிறேன். இது எனக்கு

விருப்பமாக இருக்கிறது. என்று கூறி அந்த முதியவர் அங்கேயே தங்கி விட்டார். ஆனால் இது மிகச் சிறிய தொகை.

பைபிளில் கூறப்படுவது போல "பிள்ளைகள் இருக்கவும் மலடுகளாய்போன பெற்றோரின்" தொகை அதிகமுடைய ஒரு சமூகம் இது. போர் பிள்ளைகளைத் தின்றுவிட்டது. புலப்பெயர்ச்சி பிள்ளைகளைப் பெற்றோரிடம் இருந்து பிரித்துவிட்டது.பெற்றோர் பிள்ளைகளுக்கு இறுதிக் கிரியைகளைச் செய்யும் ஒருகாலம் வந்தபோது பிள்ளைகள் தூர தேசத்திலாவது உயிர் பிழைத்திருக்கட்டும் என்று பெற்றோரே அனுப்பி வைத்தார்கள். எனவே முதியோர் தனித்துவிடப்படுதல் என்பது போரின் நேரடி விளைவுதான். தவிர குடும்பங்களில் விழுமியங்கள் சீரழிந்ததன் விளைவுந்தான்.


இங்கு மூன்று உதாரணங்களைக் கூறலாம். முதலாவது உதாரணம், வன்னியில்

நடந்தது. அங்குள்ள முன்னணிப் பாடசாலை ஒன்றுக்கு பழைய மாணவர்கள் சிலர் இணைந்து ஒரு சிற்றுண்டிச் சாலையைக் கட்டிக் கொடுத்தார்கள். அந்த சிற்றுண்டிச் சாலையை தமது பள்ளிக் காலத்தில் தமது வகுப்பு தோழர்களாக இருந்து பின்னர் போரில் நாட்டுக்காக தங்கள் உயிரைக் கொடுத்த தியாகிகளுக்கு அர்ப்பணித்திருந்தார்கள். அப்பழைய மாணவர்களில் ஒருவர் என்னைச் சந்தித்தார். அவரிடம் நான் கேட்டேன் "அந்த சிற்றுண்டிச் சாலையைத் திறக்கும் வைபவத்திற்கு குறிப்பிட்ட தியாகிகளின் பெற்றோரை அழைத்தீர்களா?" என்று. அப்பொழுதுதான் ஒரு விடயம் தெரிய வந்தது. அந்தத் தியாகிகளில் ஒருவருடைய பெற்றோர் எங்கே இருக்கிறார் என்று யாருக்கும் தெரியாது.

அந்தத் தியாகி ஒரு சிறந்த உதைப்பந்தாட்ட வீரர். அவரைத் தவிர ஏனைய சகோதரர்கள்

ஏற்கனவே புலம்பெயர்ந்து விட்டார்கள். அவர்தான் பெற்றோருக்கு உதவியாக இருந்தார்.

கடைசிக் கட்டப் போரில் கட்டாய ஆட் சேர்ப்பின்போது அவர் போருக்குள் இணைக்கப்பட்டார். போர்க்களத்தில் உயர்நீத்தார். தாயும் போரில் கொல்லப்பட்டு விட்டார். தனித்து விடப்பட்ட தந்தையை புலம் பெயர்ந்து வாழும் ஒரு பிள்ளை உறவி னர் ஒருவருக்கூடாக



முதியோர் இல்லங்களைக் கட்டியெழுப்புவது என்பது தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் தேச நிர்மாணத்தின் ஒரு பகுதிதான். முதியோரைப் பராமரிப்பதற்கு மட்டுமல்ல கைவிடப்பட்ட முன்னாள் இயக்கத்தவர்கள், விதவைகள், மாற்றுத் திறனாளிகள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், போதைப்பொருள் பாவனையாளர்கள் போன்ற எல்லாத் தரப்பினரையும் பராமரிப்பதற்கான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும்.

முதியோர் இல்லத் தில் சேர்த்து விட்டார். மேற்படி தகவல் களைச் சேகரித்த பழைய மாணவர்கள் அந்த முதியோர் இல்லத்துக்கு வந்துவிட் டார்கள். ஆனால் அவர் விடுமுறையில் சென்று விட்டதாக முதியோர் இல்லத் தில் கூறப்பட்டது. விசாரித்தபோது தெரிந்தது,

வெளிநாட்டில் வாழும் ஒரு பிள்ளை தாயகத்துக்கு வந்திருந்தபடியால் தகப்பனைப் பார்ப்பதற்காக முதியோர் இல்லத்தில் இருந்து அவரை தான் இருக்கும் இடத்துக்கு எடுத்திருக்கிறார். பழைய மாணவர்களில் ஒருவர் அந்தப் பிள்ளையின் கைபேசி இலக்கத்தை எடுத்து அவரோடு கதைத்திருக்கிறார். அவரையும் முதியவரையும் சந்திப்பதற்காக வரப்போவதாகவும் கூறியிருக்கிறார். ஆனால் அதன்பின் அந்தப் பிள்ளை தொடர்பு எடுக்கவில்லை மட்டுமல்ல, தகப்பனைக் கொண்டுவந்து இல்லத்தில் சேர்த்துவிட்டு வெளிநாட்டுக்குப் போய் விட்டார்.

இரண்டாவது உதாரணம், ஒரு பேராசிரியர். பல மாதங்களுக்கு முன்பு அவர் இறந்தபொழுது அவருடைய உடலை யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கு கொடுக்குமாறு கேட்டிருந்தார். அவரும் அவருடைய மனைவியும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு முதியோர் இல்லத்தில்தான் வசித்து வந்தார்கள். யாழ்ப்பாணத்தின் உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் பீடாதிபதியாக இருந்தவர் அவர்.

மூன்றாவது உதாரணம், ஓர் அரசியல் செயற்பாட்டாளர். ஈழ விடுதலைப் போராட்டத்தின் முக்கிய மொழிபெயர்ப்பாளர். நோர்வியின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளின்போது பெரும்பாலான எல்லாப் பேச்சுவார்த்தைகளிலும் அவருடைய முகம் உண்டு. அவருக்கு ஒரே பிள்ளை. அவரும் புலம்பெயர்ந்து விட்டார். 2009க்கு பின் அவரை தன்னுடன் வந்து இருக்குமாறு பிள்ளை அழைத்திருக்கிறார். ஆனால் இந்த முதியவர் தாயகத்தை விட்டு வெளியேபோக விரும்பவில்லை. எனவே அவருடைய பிள்ளை அவரை மாதாந்தம் பெருந்தொகை பணத்தை அறவிடும் தனியார் முதியோர் இல்லம் ஒன்றில் சேர்த்து விட்டார். அந்த மொழிபெயர்ப்பாளர் அந்த முதியோர் இல்லத்தில்தான் உயர்நீத்தார்.

நான்காவது உதாரணம், சில மாதங்களுக்கு முன் நடந்தது. புலம்பெயர்ந்து ஐரோப்பாவில் வசிக்கும் எனது நண்பர், ஓர் அரசியற் செயற்பாட்டாளர், அண்மையில் தனது தகப்பனாரைப் பராமரிப்பதற்கு யாரையாவது ஒழுங்கு செய்ய முடியுமா என்று கேட்டார். இந்த விடயத்தில் முதியோர் இல்லத்துக்குப் போக விரும்பாத முதியவர்களைப் பராமரிப்பதற்கு ஊரில் யாராவது உதவியாளரைக் கண்டுபிடித்தால் அது நல்லது.

இரண்டாவது தெரிவு, மானிப்பாயில் உள்ள மருத்துவர் கிரீன் ஞாபகார்த்த மருத்துவமனையில் முதியோரைப் பராமரிப்பதற்கான ஒரு கட்டமைப்பு உண்டு. அங்கு பயிற்றப்பட்ட தாதியர்கள் உண்டு. அவர்களைச் சம்பளத்துக்கு வேலைக்கு அமர்த்தலாம்.

மூன்றாவது தெரிவு,செக்யூரிட்டி நிறுவனங்களிடம் தொடர்பு கொண்டு வீட்டுக்கு ஒரு செக்யூரிட்டியை வேலைக்கு அமர்த்தலாம். இந்த ஏற்பாடு எல்லா முதியவர்களுக்கும்

பொருந்தாது. தன்னுடைய அலுவல்களைத் தானே கவனிக்கக்கூடிய அளவுக்குத் தெம்பாக உள்ள முதியவர்களுக்குத் தான் பொருந்தும்.

நான்காவது ஏற்பாடு, வீட்டில் கண்காணிப்புக் கமராவைப் பொருத்துவது. இதுவும் தானாக இயங்கும் முதியவர்களுக்குத்தான் பொருந்தும். ஆனால் கமரா சரிவர இயங்கவில்லை என்றாலோ அல்லது கமராவின் கண்காணிப்பு வீச்சுக்கு வெளியே முதியவர் போய்விட்டாலோ அதன் பின் அவருடைய நடமாட்டங்களைக் கவனிக்க முடியாது. இதில் கமராவைத் தொடர்ச்சியாக அடிக்கடி பார்க்க வேண்டியிருக்கும். யாழ்ப்பாணத்தில் ஒரு வீட்டில் அவ்வாறு கமரா பொருத்தப்பட்டிருந்தது. பிள்ளைகள் முதியோரின் நடமாட்டத்தைக் கமரா மூலம் கண்காணிக்க முடிந்தது. ஆனால் ஒருநாள் முதியவரைக் காணவில்லை. இரண்டாம் நாளும் காணவில்லை. பிள்ளைகள் அயலவர்களோடு தொடர்புகொண்ட பொழுது ஆயலவர்கள் வீட்டு வளவில் கமராவின் கண்காணிப்பு வீச்சுக்கு வெளியே முதியவர் விழுந்து கிடக்கக் கண்டுபிடித்தார்கள். ஆனால் கண்டுபிடித்தபொழுது முதியவருக்கு உயிர் இருக்கவில்லை. அவர் இறந்து இரண்டு நாட்களாகி விட்டது.

இந்த ஏற்பாடுகளில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்யும்படி எனது நண்பரிடம் சொன்னேன். தனித்து விடப்பட்ட முதியவர்களுக்காகக் காசு செலவழிக்கத் தயாராக இருப்பவர்களுக்குத்தான் இந்தத் தெரிவுகள். இல்லையென்றால் ஏதாவது முதியோர் இல்லத்துக்குத்தான் போக வேண்டும்.

புநசயையவசஐஉயைெ என்று அழைக்கப்படுகின்ற முதியோர் துறைசார் மருத்துவர்கள் தமிழில் மிகக்குறைவு. அதுமட்டுமல்ல முதியோரைப் பராமரிப்பதற்கான பயிற்றப்பட்ட தாதியர்களும் தமிழ்பகுதிகளில் குறைவு. இக்கட்டுரையில் முன்பு குறிப்பிடப்பட்ட மானிப்பாய் கிரீன் ஞாபகார்த்த மருத்துவமனையில் முதியோர் பராமரிப்புக்கென்று பயிற்சிகளை வழங்கும் (Institute of Medical Sciences) "மருத்துவ விஞ்ஞான நிறுவனம்" என்ற நிறுவனம் உண்டு. 2013 இலிருந்து முதியோரைப் பராமரிப்பதற்குரிய தொழில் சார் பயிற்சிகளை வழங்கிவருகிறது. இங்கு வழங்கப்படும் தொழில்சார் பயிற்சியானது இலங்கைத் தீவின் தேசிய தொழில் சார் தகமை மட்டத்தில் நான்காவது மட்டத்துக்குரியது. ஐந்தாவது தொழிற்சார் தகமை மட்டும்தான் டிப்ளமோ.

அப்படிப் பார்த்தால் தமிழ்ப்பகுதிகளில் இப்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் முதியோரைப் பராமரிக்கும் தாதியர்கள் அனைவருமே குறைந்தபட்சம் டிப்ளோமா தரத்துக்குரிய தொழில் தகமையைக்கூட கொண்டிருக்கவில்லை. ஆனால் மேற்கத்திய நாடுகளில் அது நான்கு ஆண்டுகாலப் பட்டப்படிப்பாகவும் காணப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியமனை முன்னெடுக்கும் பாரியதொரு சிறுவர் முயற்சி

**கணபதி சர்வானந்தா**

இலங்கையின் இடதுசாரிய முற்போக்கு சிந்தனையாளரான கே.ஏ. சுப்பிரமணியம் நினைவாக , அவரது மனைவியும் எழுத்தாளருமான திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் அவர்களால் சுழிபுரத்தில் அமைக்கப்பட்ட கே ஏ.எஸ் சத்தியமனை நூலகத்தில், இன்று ஞாயிறு அன்று , தமிழ் மொழி மூலம் சிறுவர்களுக்கான நூல்களை எழுதி வெளிக்கொண்டுவந்த , சிறுவர் இலக்கிய எழுத்தாளர்கள் அனைவரையும் இணைத்து "பகிர்வும் பரவலாக்கலும்" என்ற நிகழ்வை நடாத்த உள்ளனர். இலங்கை முழுவதிலும் இருந்து கலந்து கொள்ளும் அனைத்து எழுத்தளார்களையும் உள்ளடக்கிய முழுநாள் நிகழ்வாக காலை 9.00 - மாலை 4.00 மணிவரை பல நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கின்றன.

அங்கே சிறுவர்களுக்கான நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய பிரத்தியேக நூலகம் ஒன்றும் திறக்கப்படவுள்ளது. அத்துடன் புதிய சிறுவர் நூல்கள் வெளியீடும், கண்காட்சியும் இடம்பெற இருக்கிறது.

இந்நிகழ்வில் அனுபவ எழுத்தாளர்களான திக்குவல்லை கமால், ச.அருளானந்தன் (கேணிப்பித்தன்) ஓ.கே. குணநாதன், அகளங்கன், கோகிலா மகேந்திரன் எனப் பலரும் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

அன்றைய தினம் அனைத்து சிறுவர் இலக்கியம் படைத்த ஆளுமைகளின் தகவல்களை ஒன்று திரட்டி, ஒரு காத்திரமான கையேட்டை அச்சிட்டு வெளியிட இருக்கின்றனர். எனவே இது வெறுமனே ஒரு சிறுவர் நிகழ்வாக மட்டுமல்லாது எம் தேசத்தின் சிறுவர்க்கான எழுத்துகளைத் தந்த ஆளுமைகளை ஒன்று சேரச் சந்திப்பதற்கான வாய்ப்பாகவும் அமையப் போகிறது.

வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்களின் இருப்பிட, உணவு ஒழுங்குகளையும் கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகம் ஒழுங்கு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கைத் தமிழ்ச் சிறுவர் இலக்கியப் படைப்புகள் மற்றும் படைப்பாளர்களை ஆவணப்படுத்தும் பாரியதொரு முயற்சியில் இணைந்துகொள்வதற்கான ஓர் அரிய சந்தர்ப்பத்தை இந் நிகழ்வு வழங்கவிருக்கிறது.

பொதுவாகவே இலங்கைத் தமிழ் இலக்கியப் பரப்பில் பிள்ளைகளுக்கான இலக்கியப் படைப்புகள் தொடர்பில் பெரிய அளவில் அக்கறை காட்டப்படாத நிலையில், அக் குறையினை ஓரளவு நிவர்த்திக்கச் சத்தியமனை கே.ஏ.சுப்பிரமணியம் நினைவு நூலகம் தன்னாலியன்ற பல முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.அதன் ஒரு பாய்ச்சலாக 19.10.2025 ஞாயிற்றுக் கிழமை அன்று நடைபெறவுள்ள "இலங்கைத் தமிழ்ச் சிறுவர் இலக்கியப் படைப்பாளர் மாநாடு" அமையப்போகிறது என்பது பலரது எதிர்பார்ப்பு.

அம் மாநாட்டில் வைத்து வெளியீடு செய்யப்படவுள்ள, இலங்கைத் தமிழ்ச் சிறுவர் இலக்கியப் படைப்புகள் மற்றும் படைப்பாளர்கள் பற்றிய ஆவணப் புத்தகத்தின் வேலைகள் அனேகமாக நிறைவுக் கட்டத்தில் உள்ளன. இதுவரை தமிழில் இத்தகையதொரு முயற்சி முன்னெடுக்கப்பட்டிராத நிலையில், சத்தியமனை இப் பொறுப்பைத் தனி ஒரு அமைப்பாக ஏற்று, நடைமுறைப்படுத்த விளைகின்றது.

எனவே, இப் புத்தகத்தில் எங்களுக்குத் தெரிந்த, இலங்கைத் தமிழ்ச் சிறுவர் இலக்கியப் படைப்பாளர்கள் மற்றும் அவர்களுடைய படைப்புகள் தொடர்பான தகவல்களை இடம்பெறச் செய்ய, எம்மால் இயன்ற முயற்சிகளை விரைந்து முன்னெடுப்போம் என்கிறார் அதன் பொறுப்பாளர்.

# இன்றை சமூகம் எவ்வளவு விகாரமடைந்திருக்கிறது? சமூக ஊடகங்கள் வெளிப்படுத்தும் உண்மைகள்!

**கு.மதுசூதன்**

இன்றைய சமூகம் எவ்வளவு விகாரமடைந்திருக்கிறது என்பதை அண்மைய நாட்களில் சமூக ஊடகங்கள் ஊடாக அவதானிக்க கூடியதாக இருக்கின்றது!

அதாவது அண்மைய நாட்களில் நாட்டில் பேசுபொருளாக மாறியிருக்கும் பாதாள உலக கொலை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்ட போது அந்த கொலையாளிகளுக்கு எவ்வளவு சமூக ஊடகங்கள் முக்கியத்துவம் வழங்குகின்றன என்பதை பார்க்கும் போது பெரும் வியப்பை ஏற்படுத்தி நிற்கின்றன!

பாதாள உலகத்துடன் தொடர்புடையவர்கள், பெரும் கொலை, கொள்ளை, ஆட்கடத்தலுடன் தொடர்புபட்டவர்கள், இலங்கை நீதித்துறையின் பாதுகாப்பை கேள்விக்குட்படுத்தும் வகையில் நீதிமன்றத்துக்குள் துப்பாக்கி சூடு நிகழ்த்தியவர்கள் கைது செய்யப்படும் போது அவர்களை ஆதர்ச நாயகனாகவும் ஆதர்ச நாயகிகளாகவும் சமூக ஊடகங்களில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என வேறுபாடின்றி பல இளைஞர்கள் கவிதைகள், ஏஐ வடிவமைப்புக்கள், பாடல்கள் என கொண்டாடி தீர்பதென்பது இன்றைய இளைய தலைமுறை எவ்வளவு விகாரமடிந்திருப்பதென்பதை வெளிச்சம் போட்டு காட்டியிருக்கிறது.

இப்படியான சமுதாயம் ஒன்றை வைத்தா இலங்கை உலக அரங்கில் மேழும்ப போகிறது என நினைக்கவே பயமாக இருக்கிறது.

எவற்றுக்கு முக்கியம் அளிக்கப்பட வேண்டும் , எவற்றிற்கு முக்கியம் அளிக்கப்பட கூடாது, எதை தூக்கி கொண்டாட வேண்டும் , எதை தூக்கி கொண்டாட கூடாது என்ற வரையறைகள் இல்லாமல் எதிர்மறையானவற்றையே தூக்கி காவி கொண்டாடி திரிகிறார்கள்.

இது ஓர் வளமான நாட்டை கட்டியெழுப்பக்கூடிய சமூகமல்ல

எம் சமூகத்திற்கு ஒப்பில்லாத நாட்டை சீரழிக்கும் போதை கும்பல்கள், பாதாள உலக குழுவினர், கொலையாளிகளை தங்கள் ஹீரோக்களாகவும், ஹீரோயினிகளாகவும் வாழ்த்தியும் கவிபாடியும் கொண்டாடும் ஓர் சமூகத்திலா நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது கவலையளிக்கிறது.

இவர்களுக்கு பெற்றோர்கள் ஆசிரியர்கள் சமூக பெரியோர்கள் எவற்றை விதைத்திருக்கிறார்கள்.




> **இன்று கொலையாளிகளையும், சமூக விரோதிகளையும் பாடியும், பாராட்டியும், பகிர்ந்தும் திரிவதை பார்த்தால் சமூகம் எவ்வளவு விகாரமடைந்திருப்பது வெட்டவெளிச்சமாகியிருக்கிறது.**

ஒருவர் மன விகாரமாக பகிர்ந்தால் இன்னும் பத்து , நூறு , ஆயிரமாக கொலையாளிகளின் படங்களை பகிர்ந்தும் பாடியும் புகழ்ந்தும் திரிவது ஓர் இளம் சமூகம் எப்படி உருமாறி வழிமாறி விகாரமடைந்து திசைமாறி போயிருக்கிறது என்பது கண்கூடாக தெரிகிறது.

இதற்கான காரணம் ஒன்று கல்வி மயப்படுத்தலின்மை, ஆன்மீகமயப் படுத்தலின்மை, நெறிப்படுத்தலின்மை தான் காரணம்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக பெரியோர்கள் என எல்லோரும் நல்வழிபடுத்தினாலும் இளம் சமுதாயம் இப்படி எதிர்மறை விடயங்களில் கவனம் செலுத்துதல் என்பதற்கு மிக வலுவான தாக்கம் எதுவென்றால் இன்றைய கால திரைப்படங்களே ஆகும். குறிப்பாக தென் னிந்திய திரைப்படங்கள் தான். அவற்றின் சாயலில் தான் சிங்கள திரைப்படங்களும் அமைகின்றன.

இன்றைய கால கட்ட திரைப்படங்களில் கதாநாய கர்கள் ரவுடிகளாகவோ, போதை கடத்தல்காரர்க ளாகவோ, மாபியாக்களா கவோ , கொலைகாரர்களா கவோ, கொள்ளைக்காரர்களா கவோ, பாதாள உலகின ராகவோ தான் பெரும்பாலும் திரையில் காண்பிக்கப் படுகிறார்கள்.

அப்படிப்பட்ட திரைபடங்களும் காட்சிகளும் தான் இளைய சமுதாயத்தின் மனதில் ஆழமாக விதைக்கப்படுகிறது. அவற்றை செய்தால் தான் கதாநாயகன் என்ற பிம்பம் ஏற்படும் என்று ஆழ்மனதில் பதிய வைக்கப்படுகிறது.

அதனால் அவ்வாறே அவர்களும் வரிந்து கட்டப்படுகிறார்கள்.

திரையில் தோன்றும் தன் ஆதர்ச நாயகன் மது அருந்தினால் , புகைப்பிடித்தால், போதைவஸ்து பாவித்தால் , கொலை செய்தால், கொள்ளையடித்தால், மாபியாக்களுடன் சேர்ந்தியங்கினால் அதுதான் "ரோல்மொடல்" என நினைத்து தாமும் தம்மை அப்படியே வரிந்து கட்டி கொள்கிறார்கள்.

அப்படியானவர்களை ஹீரோவாக பார்த்ததால் பெண்களும் அப்படியானவர்கள் தான் "ரியல் ஹீரோ" என எண்ணும் அளவிற்கு இன்றைய தலைமுறை அகல பாதாளத்திற்குள் சென்றிருக்கிறது.

முன்னைய கால 50 களின், 60களின், 70களின், 80களின், 90களின் ஆண்டு கால திரைப்படங்களில் கதாநாயகர்கள் ஒழுக்கமானவர்களாகவும், தவறுகளை தட்டி கேட்பவர்களாகவும், சமூக நீதிக்காக போராடியவர்களாகவும், தர்மத்தினை நிலைநாட்ட போராடியவர்களாகவும், குடும்ப நேர்த்தியை கட்டமைத்து காட்டியவர்களாகவும், ஓர் பெண் சீரழிக்கப்படும் போது அவர்களை காப்பாற்றியவர்களாகவும், பெண்ணியம் காத்தவர்களாகவும், நாட்டு பற்று கொண்டவர்களாகவும் திரையில் காண்பிக்கபட்டார்கள். எனவே அந்த தலைமுறையினை சார்ந்த இளைஞர்கள் அப்படியே நேர்மறை எண்ணங்களோடு வாழ்வில் வாழ்ந்துகொண்டார்கள்.

ஆனால் இன்றோ ரவுடிகளாக, போதைக்கு அடிமையானதாகவும், கடத்தல் காரனாகவும், கொள்ளையனாகவும், மாபியா ஆகவும், பெண்களை சீரழிப்பவனாகவும் கதாநாயகர்கள் திரையில் காண்பிக்கபடுகிறார்கள் . அவற்றையே இன்றைய தலைமுறையினர் "ஹீரோயிசம்" என்ற எண்ணக்கருவுக்குள் கொண்டுவந்து தம்மையும் அவ்வாறே சமூகத்தில் பிரதிபலிக்க தொடங்குகிறார்கள். அப்படியானவர்களை தான் பெண்களும் ஹீரோவாக பார்க்கும் ஓர் விகாரமடைந்த காலமாக இது உருக்கொண்டு உள்ளது.

அதன் விளைவு தான் இப்போது இலங்கையிலே கைது செய்யப்படும் பாதாள உலக குழுவை சேர்ந்த, கொலைகளுடன் சம்மதப்பட்டவர்கள் கைது செய்யப்படும் போது அவர்களினை அதிகம் பகிர்வதும், பாராட்டுவதும், கவிபாடுவதும், காவி திருவதுமாக இருக்கிறது இன்றைய சமூகம்.

அரசு பக்கமும் ஓர் பிழை உண்டு.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்து போன ட்ரம்பின் நோபல் கனவு:

## ஏழுகடல் தாண்டி ஏழு யுத்தங்களை நிறுத்தினாரா ?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

உலகின் மிகவும் உயர்ந்த 2025 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுலா எதிர்க் கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோவுக்கு வழங் கப்பட்டதாக நோர்வே நோபல் குழு அறிவித்துள்ளது.

அமைதிக்கான நோபல் பரிசுக்கு ஆசைப்பட்டு, நான் ஏழு போர்களை நிறுத்திவிட்டேன் என்று அதிபர் ட்ரம்ப் தம்பட்டம் அடித்தாலும், இந்தாண்டுக்கான பரிசுக்கு அவர் தேர்வு செய்யப்படவில்லை.

எந்த ஆண்டும் இல்லாத வகையில் இந்த ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு முக்கியத்துவம் பெற்றது என்றே சொல்லலாம். அதற்கு காரணம் அதிபர் ட்ரம் பின் கடந்த கால பேச்சும், திரும்ப திரும்ப நான் போர் களை நிறுத்திவிட்டேன் என்றும் கூறியது தான். அதுமட் டுமின்றி அவர் ஒரு படி மேலே போய், 'எனக்கு நோபல் பரிசு தராவிட்டால் அது அமெரிக்காவுக்கு பெரும் அவ மானம்' என்றும் தெரிவித்தது தான் அனைவரது கவனம் பெற்றது.


இதனால் இந்தாண்டு நோபல் அமைதிப்பரிசு யாருக்கு கிடைக்கப் போகிறது என்று பெரும் எதிர்பார்ப்பு எழுந் தது. அதற்கு எல்லாம் விடை கொடுக்கும் வகையில், அமைதிக்கான நோபல் பரிசு இந்தாண்டு யாருக்கு என் பதை நோர்வே நாட்டு நோபல் குழுவினர் அறிவித்தனர். அவர்கள் ட்ரம்பின் கனவுகளை தவிடுபொடியாக்கினர் என்பதே இறுதியான உண்மையாகும். இந்தாண்டு அமைதிக்கான நோபல் பரிசை, வெனிசுலாவை சேர்ந்த மரியா கொரினா மச்சாடோ வென்றாலும், ட்ரம்பின் அதீத ஆசைக்கனவு குறைந்தபாடில்லை.

**ட்ரம்ப் கடும் கோபம்:**

இந்த அறிவிப்பின் பின்னர், அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காதமையால் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடும் கோபமடைந்துள்ளார். மேலும் வெள்ளை மாளிகை கடுமையாக எதிர்ப்பு வெளியிட ஆரம்பித்துள்ளது.

என்ன தான் ட்ரம்ப் தனது அதிகாரத்தை பயன்படுத்தி, பாரிய தம்பட்டம் அடித்துக் கொண்டாலும், அமைதிக் கான நோபல் பரிசு குறி தவறியுள்ளது என்பதே வெளிப் படை. ட்ரம்ப் ஏழு போர்களை நிறுத்திவிட்டேன் என்று கூறி வந்தாலும், ட்ரம்புக்கு நோர்வே குழுவினர் அமைதிக் கான நோபல் பரிசு வழங்கவில்லை.

இதனையடுத்து நோர்வே நோபல் குழு அமைதியை விட அரசியலுக்கு முன்னுரிமை அளிப்பதாக வெள்ளை மாளிகை குற்றம் சாட்டியுள்ளது. உலகின் மிகவும் மதிப்பு மிக்க விருதை வெல்ல ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பல மாதங்களாக முயற்சி செய்து பிரச்சாரம் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்த அமைதிக்கான பரிசைப் பெறுவதற்கான தனது விருப்பத்தை அவர் வெளிப்படையாக தெரிவித்ததுடன், அதற்காக கடுமையாக பாடுபட்டுள்ளார். காசாவில் இரண்டு ஆண்டுகால போர் முடிந்துவிட்டதாக ட்ரம்ப் அறிவித்த வேளையிலேயே, அமைதிக்கான நோபல் பரிசு வென்றவரை இக்குழு தெரிவித்தது.

**அமெரிக்காவுக்கே அவமானம்:**

எனக்கு நோபல் பரிசு கிடையாதா என்று கேள்வி எழுப்பிய ட்ரம்ப், அமெரிக்காவுக்கே அவமானம் என் றும் கொந்தளித்துள்ளார்.

அதிபர் ட்ரம்ப், உலக நாடுகளின் போர்களுக்கு தான் தீர்வு கண்டபோதும், எதுவுமே செய்யாத ஒருவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது என்று மிகவும் ஆதங் கத்துடன் தெரிவித்துள்ளார். யாரும் இதுவரை இப்படிச் செய்தது இல்லை. ஆனால், உங்களுக்கு நோபல் பரிசு கிடைக்குமா? நிச்சயமாகக் கிடைக்காது என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும் நையாண்டியாக, "எதுவுமே செய்யாத சில ருக்கு நோபல் பரிசை அவர்கள் கொடுப்பார்கள். டொனால்டு ட்ரம்ப் போர்களை முடிவுக்குக் கொண்டு வர என்ன செய்தார் என்பது பற்றி ஒரு புத்தகம் எழுதிய வருக்கு அந்தப் பரிசைக் கொடுப்பார்கள். நோபல் பரிசு ஒரு எழுத்தாளருக்குச் செல்லும்" என்றும் சிலாகித்துக் கூறியுள்ளார்.

**காசாப் போரில் ட்ரம்ப்:**

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான காசா மோதல், தனது 20 அம்ச அமைதித் திட்டத்தின் மூலம் முடிவுக்கு வந்தது என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவில் ட்ரம்பின் ஆதரவாளர்கள் "சமாதானத்தின் ஜனாதிபதி" என்ற தலைப்பில் பல சமூக ஊடகப் பதிவுகளை வெளியிட்டுள்ளனர். எட்டு மாதங்களில் எட்டு போர்களை முடிவுக்குக் கொண்டு வந்ததாக கூறியுள்ளனர்.




இரு வருடங்களுக்கு மேலாக நடந்த போரில், இஸ் ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இந்தத் திட்டத் திற்கு ஆதரவு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந் தத் திட்டம் முழுமையாக வெற்றியடைந்தால், ட்ரம்ப் தீர்த்து வைத்த மோதல்களின் எண்ணிக்கை எட்டாகும். "காசாவில் அமைதி வெற்றி பெற்றால், எட்டு மாதங்க ளில் எட்டு மோதல்களைத் தீர்த்தோம். இது மிகவும் நல்லது," என்றும் ட்ரம்ப் கூறியுள்ளார்.

நீண்ட நாட்களாக நோபல் அமைதிப் பரிசைப் பெறு வதற்காக அதிபர் ட்ரம்ப் உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டி வந்தார். கடந்த சில மாதங்களாக காசா போர் மற்றும் உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவது அவருக்கு முக்கியமான இராஜதந்திர சவால்களாக இருந் தன.

பல்வேறு போர்களை முடிவுக்குக் கொண்டு வந்திருப் பதாகச் சொல்லிவரும் ட்ரம்ப், பல நாடுகளின் பரிந்து ரைகளையும் பெற்றுள்ளார். பாகிஸ்தான், கம்போடியா, இஸ்ரேல் போன்ற நாடுகள் ட்ரம்பை அமைதிக்கான நோபல் பரிசுக்குப் பரிந்துரை செய்துள்ளன என்பதை மறுக்க முடியாது.

ட்ரம்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்காத தற்கு காரணம் குறித்த பல சர்ச்சைகள் வெளியாகியுள் ளன.

நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்படும் காலத்திற்குப் பிறகே, அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இஸ்ரேல், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் அதிபர் ட்ரம்ப்பின் பெயரை பிப்ரவரி 1க்குப் பிறகு பரிந்துரை செய்துள்ளன. இதுவே அவருக்கு நோபல் பரிசு கிடைக்காமல் போனதற்கான முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது.



இது குறித்து நோர்வே தேர்வுக்குழுவில் கருத்து தெரி விக்கையில்,நோபல் பரிசு தேர்வு கமிட்டி, அனைத்து வகையான பிரசாரங்கள், ஊடக கவனத்தையும் பார்த் துள்ளது. அமைதிக்கு வழிவகுக்கும் காரணிகள் குறித்து ஆயிரக்கணக்கான கடிதங்களை ஆண்டுதோறும் பெறு கிறோம்.

நாங்கள் அமர்ந்திருக்கும் அறை தைரியம் மற்றும் நேர்மையால் நிரம்பியுள்ளது. எங்களின் முடிவை ஆல் பிரட் நோபலின் (நோபல் பரிசை அறிமுகப்படுத்தியவர்) செயல் மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் எடுக்கி றோம் எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், இந்தாண்டு அமைதிக் கான நோபல் பரிசை தனக்கு தான் வழங்க வேண்டும். நோபல் பரிசு வழங்காவிட்டால், அது அமெரிக்காவை இழிவுபடுத்தும் செயல் என்று கூறியிருந்தமை நோர்வே அரசையும் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது.

அது மாத்திரமன்று நியூயார்க் நகரில் ஐ.நா.பொதுக் குழுக் கூட்டம் கடந்த மாதம் செப்டம்பரில் நடைபெற்ற போது தனக்கு நோபல் பரிசு வழங்க வேண்டும் என்று ட்ரம்ப் தெரிவித்தமை பரபரப்பை ஏற்படுத்தியது.

அதில் நோபல் பரிசு குறித்து ட்ரம்ப் கூறுகையில், "எனக்கு நோபல் பரிசு கிடைக்காமல் இருப்பது நியாய மற்றது. அவர்கள் நியாமாக வழங்கினார்கள் என்றால் எனக்கு நிறைய நடவடிக்கைகளுக்காக நோபல் அளிக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு இருக்க மாட் டார்கள்.

ஒபாமா பதவிக்கு வந்த சில ஆண்டுகளிலேயே அவ ருக்கு நோபல் பரிசு வழங்கினார்கள். உண்மையில் அவ ருக்கு எதற்கு வழங்கினார்கள் என்று அவருக்கே தெரி யாது. கடந்த 2009 ஆம் ஆண்டு அமெரிக்காவின் முன் னாள் அதிபர் பாரக் ஒபாமாவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டதை கிண்டலடித்தே ட்ரம்ப் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

**புவிசார் அரசியலில் ட்ரம்ப்:**

கடந்த ஓர் ஆண்டில் புவிசார் அரசியலில் ட்ரம்ப் மிகக் கவனம் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக் கது. ட்ரம்ப் இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவும் விரிசலை சரிசெய்ய சமீபகாலமாக அக்கறை கொண்டு



இரு நாடுகளுக்கும் தூதராகச் செயல்பட்டு வருகிறார். மேலும் ஈரான், வடகொரியா விவகாரத்தில் அரசியல் ரீதியாக முக்கிய முடிவுகளை ட்ரம்ப் எடுத்து வருகிறார்.

இந்நிலையில், வெனிசுலா நாட்டின் மரியா கொரினா மச்சாடோவுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டமை, ட்ரம்ப் மற்றும் அவரது ஆதரவாளர்களிடையே அதிருப் தியை ஏற்படுத்தியுள்ளமை மட்டுமல்லாமல், ஜீரணிக்க வும் முடியாமல் உள்ளனர்.

தற்போது அமெரிக்காவில் ட்ரம்பின் ஆதரவாளர்கள் "சமாதானத்தின் ஜனாதிபதி" என்ற தலைப்பில் பல சமூக ஊடகப் பதிவுகளை வெளியிட்டுள்ளனர்.

எட்டு மாதங்களில் எட்டு போர்களை முடிவுக்குக் கொண்டு வந்ததாக அவர்கள் கூறியுள்ளனர்.

ஜனாதிபதி ட்ரம்ப் தீர்த்து வைத்த போர்களில் சமீபத் திய இஸ்ரேல் - ஹமாஸூக்கும் இடையிலான இரண்டு ஆண்டு மோதல் ஆகும். மற்ற ஏழு மோதல்கள் இஸ்ரே லுக்கும் ஈரானுக்கும், பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும், ருவாண்டா மற்றும் காங்கோ ஜனநாயகக் குடியரசுக்கும், தாய்லாந்து மற்றும் கம்போடியாவுக்கும், ஆர்மீனியா மற்றும் அஜர்பைஜானுக்கும், எகிப்து மற்றும் எத்தியோப் பியாவுக்கும், செர்பியா மற்றும் கொசோவோவுக்கும் இடையிலானவை.

ஆனாலும் பாலஸ்தீன கைதிகளுக்காக இஸ்ரேலிய பணயக்கைதிகளை பரிமாறிக் கொள்வது உட்பட, இஸ் ரேலுக்கும் ஹமாஸூக்கும் இடையிலான போர் நிறுத் தத்தை ஏற்படுத்துவதில் ஜனாதிபதி ட்ரம்ப் வகித்த பங் கிற்கு பரவலான பாராட்டுகளைப் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 கோடி ரூபாய் பெறுமதியான கஜமுத்துகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஒக். 19

30 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்புள்ள கஜமுத்துகளுடன் சந்தேகநபர் ஒருவரை மகியங்கனை ஆதிவாசி கிராமத்தில் வைத்து வனவிலங்கு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

வில்பத்து, ரிடிகல மற்றும் மகியங்கனை வனவிலங்கு அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் மூலம் நேற்று முன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வு தகவல்களுக்கு அமையவே இந்தக் கைது நடைபெற்றுள்ளது. சந்தேகநபரிடமிருந்து 30 கஜமுத்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன. ஒரே இடத்தில் இவ்வளவு பெருந்தொகை கஜமுத்துகள் கைப்பற்றப்பட்டமை நாட்டில் இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது.

கஜமுத்துகள் தவிர, சிறுத்தையின் தோல், யானைத் தந்தத்தின் பகுதிகள், சிறுத்தையின் எண்ணெய், கருங்காலி மரப் பகுதிகள், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று, விலங்குகளைப் பிடிக்கப் பயன்படுத்தப்படும் பொறிகள் மற்றும் வன விலங்கு, வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் மிகக் பாதுகாக்கப்பட்ட தாவரமான தம்பு தாவரத்தின் பகுதிகள் ஆகியவற்றையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

விசாரணையில், சந்தேகநபர் யானைத் தந்தங்களைப் பயன்படுத்தி பல்வேறு கலைப் பொருட்களை தயாரித்து நீண்டகாலமாக இந்த கடத்தலில் ஈடுபட்டு வந்தது தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வனவிலங்கு அதிகாரிகளின் பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## பொறுப்புக்கூறல் விவகாரத்தில்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தின் வழக்குத்தொடுநர் நீதிமன்றத்தை கேட்டி ருக்கிறார். இது அந்த விசாரணையின் தற்போதைய நிலை வரம்.

இது இவ்வாறிருக்க, றொஹங்கியா மக்கள் இன அழிப்புச் செய்யப்படுவதை தடுக்கவில்லை என்றும் இன அழிப்புக்கு பொறுப்பானவர்களை தண்டிக்கவில்லை என்றும் மியன்மார் அரசுக்கு எதிராக குற்றஞ்சாட்டி சிறியதொரு ஆபிரிக்க நாடான காம்பியா 2019 ஆம் ஆண்டில் தொடுத்த வழக்கை சர்வதேச நீதிமன்றமும் தற்போது விசாரணை செய்து வருகிறது. இன அழிப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் மியன்மாரை நிர்ப்பந்திக்கும் உத்தரவை அந்த நீதிமன்றம் 2020 ஆம் ஆண்டில் பிறப்பித்தது.

தனது தீர்ப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கான முறைப்படியான பொறிமுறை எதுவும் சர்வதேச நீதிமன்றத்திடம் கிடையாது. இறுதியில் அவற்றின் நடைமுறைப்படுத்தலும் கூட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் வீட்டோ அதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள் சம்பந்தப்பட்ட ஒரு அரசியல் விவகாரமாகவே மாறிவிடுகிறது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை றோம் சாசனத்தில் கைச்சாத்திட்ட அரசுகளே நடைமுறைப்படுத்த வேண்டும். இதுவரையில் அந்த நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை எத்தனை அரசுகளினால் உருப்படியாக நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருந்தது என்பது இன்னொரு கேள்வி.

இலங்கை அரசை பொறுப்புக்கூற வைப்பதற்கு கடந்த 16 வருடங்களாக சர்வதேச சமூகத்தின் உதவியை நாடுவதற்கு தமிழர் தரப்பு முன்னெடுத்த முயற்சிகளின் அனுபவங்களின் அடிப்படையிலேயே அடுத்த நகர்வைப் பற்றி சிந்திக்க முடியும். பொறுப்புக்கூறல் விடயத்தில் தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் மீது நெருக்குதல்களை பிரயோகிப்பதில் சர்வதேச நாடுகளுக்கு பெரிய அக்கறை இல்லை என்பதையே அக்டோபர் 6 ஜெனீவா தீர்மானம் தெளிவாக வெளிக்காட்டியிருக்கினது.

இத்தகைய சூழ்நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பது தொடர்பிலும் போரின் இறுதிக் கட்டங்களின் குற்றங்களுக்கு பொறப்புக்கூறலை கோருவது தொடர்பிலும் இதுவரையில் கடைப்பிடித்த அணுகுமுறைகளை தமிழர்கள் மீள்பரிசீலனை செய்யவேண்டிய தருணம் வந்துவிட்டது.

## வகுப்பறைகளில் நிற்கவேண்டிய...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டுப் புள்ளியும் இரணைதீவுக்குக் குறைந்த வெட்டுப் புள்ளியும் அறிவித்தால் அதனை நியாயம் என்று எத்தனை பேர் ஏற்றுக் கொள்வர்? அது அநியாயம். எல்லோருக்கும் வெட்டுப்புள்ளி ஒன்றாக இருக்கவேண்டும். ஆனால் யாழ்ப்பாணத்தில் இருப்பவர் கிளிநொச்சி மாவட்டத்துக்கோ அல்லது கிளநொச்சி நகரில் இருப்பவர் இரணைதீவுக்கோ போக மறுப்பது மட்டும் அவர்களுக்கு நியாயமாகப்படும்.

பணியிடமாற்றம் தொடர்பில் அதிகளவு விமர்சனத்துக்குரிய விடயமாக இருப்பது அதில் அரசியல்வாதிகளின் தலையீடுகளும் அதிகாரிகளின் விருப்பங்களும் செல்வாக்குச் செலுத்தும் நடைமுறைகளாகும். குறித்த பணியொன்றின் இடமாற்றக்கொள்கை மற்றும் நியமங்களின் அடங்கக்கூடிய அத்தனை பணியாளர்களும் இடமாற்றத்தை ஏற்று பணிக்குச் செல்லவேண்டும். அல்லது அப்பணியைக் கைவிட்டு வசதியான வேறுபணியைத் தேடவேண்டும். அது சலுகைகள், முறைகேடுகள் இன்றி இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுமானால் முறைமை சீராக இயங்கும். அதைவிடுத்து இடமாற்றம் வழங்கப்பட்டவர்கள் அல்லது வழங்கப்படவேண்டியவர்கள் தமது அரசியல் அல்லது அதிகாரிகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி அதனைத் தவிர்க்கும்போது மற்றைய ஆசிரியர்கள் தமது இடமாற்றத்தை ஏற்க மறுப்பதுடன் அதனை வேறுவழிகளில் எதிர்க்க முயற்சிப்பர். அத்தகைய வழிகளில் ஒன்றுதான் நடுவீதியில் நின்று போராடுவது. ஆசிரியர்களை இவ்வாறு நடுவீதிக்குத் தள்ளுவதில் அதிக பங்கு அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையுமே சேரும். அது தொழிற்சங்கங்களுக்கு சும்மா மெல்லுகிற வாய்க்கு அவல்கிடைத்த மாதிரி. வடமாகாணக் கல்வித் துறையில் அரசியல் தலையீடுகள் என்பது நீண்ட நாள் நோய். ஆட்சியிலிருக்கும் அரசியல் வாதிகளும் அவர்களின் எடுபிடிகளும் சுதந்திரமாக விளையாடும் களங்களில் இதுவும் ஒன்று. வடக்கு மாகாண சபை நடந்தபோது நமது தமிழத் தேசிய வீர்ர்களும் இந்த விளையாட்டை விளையாடத் தவறவில்லை. இங்கு விளையாட்டு ஒன்றுதான். ஆனால் விளையாடும் வீரர்கள் மாறிக்கொண்டிருப்பர். அந்தளவே. இந்த விளையாட்டை மாற்றுவோம் என்று வந்தவர்களும் அதே விளையாட்டை விளையாடுவது தான் வேதனை. வழங்கப்பட்ட இடமாற்றங்களை ஆளுநர் நிறுத்த முடியுமானால் இடமாற்றச்சபை, மேன்முறையீட்டுச் சபை எல்லாம் எதற்காக?

ஒரு காலத்தில் தொழிற்சங்கங்கள் தமது தொழிலாளர் நலன்களுக்கே முக்கியம் கொடுத்தன. ஆனால் இன்றுள்ள பல தொழிற்சங்கங்கள் தொழிலாளர் நலனை பணயம் வைத்து அரசியல் நலனை அடைய முயற்சிக்கின்றன. உண்மையில் தொழிலாளர் நலனை முன்னிறுத்தி செயற்படுவதானால் ஒரு அரச சேவைக்குப் பல தொழிற்சங்கங்கள் உருவாக்க வேண்டிய தேவை இல்லை. அவ்வாறிருந்தாலும் தொழிலாளரின் நியாயமான பிரச்சினையில் அவை ஒன்றுபட்டு நிற்கவேண்டும். ஆனால் இங்கு நடப்பது அதற்கு எதிர்மாறு. சில தொழிற்சங்கங்கள் போராடுகின்றன. இன்னொரு தொழிற்சங்கம் அதற்கு எதிராகப் போராடுகிறது. அப்படியானால் இந்தத் தொழிற்சங்கம் யாருடைய நலனை முதன்மைப் படுத்துகிறது? பிரச்சினை தொடர்பாக்க் கல்விப்பணிப்பாளரின் அறிக்கை நடுநிலையானதாக, உண்மைகளை வெளிக்கொணர்வதாக இருக்கவேண்டும் என சமூகம் எதிர்பார்க்கிறது. ஆனால் அவ்வறிக்கை அரச சார்பு தொழிற்சங்கப் பிரதிநிதி கூறுவதைப் போல சிலரைக் குற்றஞ்சாட்டுவதாக உள்ளது. பணிப்பாளரின் அறிக்கை தவறானது என சான்றுகளுடன் குற்றஞ்சாட்டப்பட்ட தரப்பு முன்வைக்கிறது. அப்படியானால் யார் கூறுவது உண்மை? அனைத்திலும் தலையிடும் ஆளுநரால் ஏன் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாதுள்ளது? ஆசிரியர்களின் நியாயமான கேள்விகளுக்கு அவரால் ஏன் பதிலளிக்க முடியாதுள்ளது? பாடசாலைக் கல்வித்துறையின் மையப்பொருள் மாணவர்கள். அவர்களுக்காகவே அத்துறையின் அனைத்து வளங்களும் கட்டமைப்புகளும் உள்ளன. மாணவர்கள் இல்லையெனில் ஆசிரியர்களுக்கும் வேலையில்லை. அதிகாரிகளுக்கும் வேலையில்லை. ஆனால் அந்த உண்மையை மறந்து ஒவ்வொரு தரப்பும் தாங்கள் இல்லையென்றால் கல்வித்துறையே இல்லையென்று செயற்படுவதே பெரும்பாலான பிரச்சினைகள் உருவாகக் காரணமாகின்றன. இந்த எண்ணம் இருக்கும்வரை இதுபோன்ற பிரச்னைகளும் இருக்கவே செய்யும்.

## இன்றைய சமூகம்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி சமூகத்திற்கு ஒப்பல்லாத சமூக விரோதிகள் கொலையாளிகள் கைது செய்யும் காட்சிகளை, நாட்டுக்கு கொண்டுவரும் காட்சிகளை வெளியில் பகிர விட்டமை மிகத்தவறான விடய மாகும்.

அதைவிட ஓர் சிறு குற்றவாளியை பொலிஸ்நிலையத்தில் எப்படி ஓர் குற்ற வாளிபோல் மிக கீழ்தரமாக நடத்து வார்கள். ஆனால் ஓர் பாதாள உலக குழுக்களை சேர்ந்தவர்கள், கொலையு டன் சம்மந்தப்பட்டவர்களை நல்ல ஆடைகள் அணிவித்து, சூட்கேசுடன், மேக்கப் போடு ஏதோ சுற்றுலாவுக்கு அழைத்து வருவது போல் நாட்டிற்கு அழைத்து வருகிறார்கள். அதை ஊடகம் முன் வெளிச் போடவும் வைக்கிறார்கள். அரசு கைது செய்துவிட்டது என்ற தங்கள் பெருமை வெளித்தெரிவதற்காக அந்நிகழ்வு சமூகத்தில் என்ன தாக்கத் தினை உண்டுபண்ணும் என்பதனையும் அரசு அறிந்து செயல் பட வேண்டும்.

ஆக இன்று கொலையாளிகளையும், சமூக விரோதிகளையும் பாடியும், பாராட்டியும் , பகிர்ந்நதும் திரிவதை பார்த்தால் சமூகம் எவ்வளவு விகாரம டைந்திருப்பது வெட்டவெளிச்சமாகியி ருக்கிறது. அத்தோடு இந்த சமூகத்தில் யார் யார் அப்படி நடந்துகொண்டார் கள் யார் யார் அந்த மனநிலையில் இருக்கிறார்கள் என்பதையும் இந்த சமூக ஊடகங்கள் காண்பித்துவிட்டது. அப் படியானவர்களை சமூக ஊடகங்களில் இருந்தும் சமூகத்தில் இருந்தும் புற மொதுக்கி வைத்தலே ஓர் ஆரோக்கிய மான சமுதாயத்தையும் நாட்டையும் கட்டியெழுப்ப உதவும்.

## தனித்து விடப்படும்...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் மாணிப்பாய் கிரீன் ஞாப கார்த்த மருத்துவமனையில் மட்டும்தான் அவ்வாறான கற்கை நெறி உண்டு. அதே சமயம் முதியோரியல் துறைக்குரிய மருத்துவ நிபுணர்களின் தொகையும் குறைவு.

ஆனால் தமிழர் தாயகத்தில் வடக்கில் மட்டும் 60வயது கடந்த முதியோர் மொத் தம் இரண்டு இலட்சத்து 29 ஆயிரத்து 867 பேருக்கு மேல் உண்டு. இதில் யாழ்ப் பாணத்தில் மட்டும் ஒரு லட்சத்து 54 ஆயிரத்து 626 முதியோர் உண்டு. வடக்கில் மட்டும் மொத்தம் 28 முதியோர் இல்லங்கள் உண்டு. இவற்றுள் ஆகப் பெரியது கைதடியில் உள்ள அரச முதி யோர் இல்லந்தான். அங்கே 200க்கும் குறையாத முதியோர் உண்டு. அதாவது வடக்கில் மட்டும் மொத்த ஜனத்தொகையில் கிட்டத்தட்ட 20 விகிதம் முதியவர் கள்.

எனக்குத் தெரிந்து புலம் பெயர்ந்து போன பிள்ளைகளில் ஒரு பகுதியினர் தமது முதிய பெற்றோரைப் பராமரிப்ப தற்காக ஊரில் குறிப்பிட்ட காலத்துக்கு வந்து தங்கி நிற்கிறார்கள். அதிகம் பிள் ளைகளைப் பெற்ற பெற்றோருக்கு தொடர்ச்சியாக யாராவது ஒரு பிள்ளை வீட்டில் நிற்கின்றது. அது ஒரு கொடுப் பினை. ஆனால் எல்லாருக்கும் இல்லை. எனவே தமிழ் மக்கள் இதுதொடர்பில் வேகமாக முடிவெடுக்க வேண்டும். தாயகத்தில் உள்ள அரசியல் கட்சிகளும் செயற் பாட்டாளர்களும் புலம் பெயர்ந்த தமி ழர்களும் சேர்ந்து இதுதொடர்பாக பொருத்தமான முடிவுகளை எடுக்கலாம். இதுவிடயத்தில் பின்வரும் விடயப்பரப் புகளின் மீது கவனத்தைக் குவிக்கவேண் டும். முதலாவதாக எத்தனை முதியவர்கள் தனித்து விடப்பட்டிருக்கிறார்கள் என்பது தொடர்பாக சரியான புள்ளி விபரங்களைச் சேகரிப்பது.

இரண்டாவது, முதியோரை பராமரிப் பதற்கான நிறுவனங்களைக் கட்டியெழுப் புவது. மூன்றாவது, பராமரிப்பாளர்க ளைப் பயிற்றுவிக்கும் கற்கை நெறிகளை குறைந்தபட்சம் தனியார் கல்விக் கட்டமைப்புகளுக்கு ஊடாகத் தொடங்குவது. இது ஒரு தேசியக் கடமை.

முதியோர் இல்லங்களைக் கட்டியெழுப்புவது என்பது தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் தேச நிர்மாணத்தின் ஒரு பகுதிதான். முதியோரைப் பராமரிப்பதற்கு மட்டுமல்ல கைவிடப்பட்ட முன்னாள் இயக்கத்தவர்கள், விதவைகள், மாற்றுத் திறனாளிகள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், போதைப்பொருள் பாவனையாளர்கள் போன்ற எல்லாத் தரப்பினரையும் பராமரிப்பதற்கான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். இவையாவும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான கட்டமைப்புகள்தான்.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு வரும்வரையிலும் இந்தக் கட்டமைப்புகளை ஒத்தி வைக்க முடியாது.

பராமரிக்கப்பட வேண்டிய பிரிவினர் பராமரிக்கப்படாமல் அனாதைகளாக விடப்படுவது என்பது ஒரு தேசிய அவமானம். எனவே தேசத்தைக் கட்டியெழுப்புவதன் ஒரு பகுதியாக மேற்கண்ட நிறுவனங்களைக் கட்டியெழுப்ப வேண்டும். நான் இந்தக் கட்டுரையை எழுதி முடிக்கும்போது எங்கேயோ ஒரு தொலை கிராமத்தில் யாரோ ஒரு முதியவர் உதவிக்கு ஆளில்லாமல் இறந்து போயிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்வாதிகளின்...

பெரும்பாலானவர்கள் வாழ்வதற்காக வாழவில்லை, வாழ்வாதாரத்துக்காகவே வாழுகிறோம் (லிவிங் போஃர் செவைவல் நொட் போஃர் லைஃவ்).

போருக்குப் பின்னரான அல்லது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னரான காலப்பகுதியில் எமது மக்களுக்கு மிக அவசியமானது குணமாக்கல் ஆகும். சமூகத்தில் காணப்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகளைக் குணப்படுத்தாமல் தேசியத்துக்கான எதிர்காலம் பற்றிப் பேசிப் பலன் இல்லை.

இங்கே அரசியல்வாதிகள் பலர் இருக்கிறார்கள். நான் யாரையும் குத்திக் காட்டுவதற்காக இதைச் சொல்ல வில்லை.

ஆரம்பத்தில் உளப்பாதிப்பு என்பது ஒரு நோய் நிலையாக இருந்தது. போர் முடிவடைந்ததும் அது இடைத்தங்கல், புனர்வாழ்வு முகாம்களை மையப்படுத்தி அதிகரித்தது, அதன் பின் போதைப் பாவனை, சிறைச்சாலைகளிலும், குடும்பங்களின் பிளவுகளிலும் சுழன்று கொண்டு நிற்கிறது. மக்கள் தேசியத் தைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்னர் குண மாக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்றார்.

இந்த நூல் வெளியீட்டின் போது, பொறியியலாளர் சு.சிவகுமார், சமூக செயல்பாட்டாளர் சி. கருணாகரன் ஆகியோரும் உரையாற்றினர்.

தேசிய மக்கள் சக்தியின் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் இ. சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் வடக்கு மாகாணசபை அவைத் தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான சி.வி.கே. சிவஞானம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் உட்பட அரசியல் பிரமுகர்களும், சமூக ஆர் வலர்களும் கலந்து கொண்டனர். (அ-02-03)

## போதைக் கும்பல்...

அதிகாரிகளை, விமானப்படை அதிகாரிகளாக நியமிப்பது தொடர்பில், நேற்று காலை, சீனக்குடா விமானப் படை கல்விப் பீடத்தில் இடம்பெற்ற விழாவில், இவ்வாறு குறிப்பிட்டார்.

'சுரகிமு லகபர' என்ற தொனிப்பொருளின் கீழ், இலங்கையின் நீல வானத்தைப் பாதுகாக்கும் இலங்கை விமானப் படையின் 3 ஆவது சமுத்திர படைப் பிரிவு, தாய்நாட்டின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்காக மேற்கொண்டு வரும் உயர்ந்த சேவை, செயற்பாட்டுச் சிறப்பு மற்றும் தாய்நாட்டைப் பாதுகாப்பதற்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பு ஆகியவற்றை பாராட்டும் வகையில், ஜனாதிபதி வர்ண விருது வழங்கப்பட்டன.

இலங்கை வான்வெளியைப் பாதுகாப்பதன் மூலம், நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கும் இலங்கை விமானப் படையின் உறுப்பினர்களாக, விமானப் படையில் இணைந்த 66 ஆவது, 67 ஆவது மற்றும் 68 ஆவது கடேட் அதிகாரி பாடநெறியை பூர்த்தி செய்த அதிகாரிகளை விமானப் படை அதிகாரிகளாக நியமித்தல் மற்றும் 103 ஆவது இலக்க பறக்கும் கெடெட் அதிகாரி பாடநெறியை நிறைவு செய்த அதிகாரிகளுக்கு, பறக்கும் அதிகாரி சின்னம் அணிவித்தல் என்பன, முப்படைத் தளபதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க,

போதைப்பொருள் கடத்தல் மற்றும் குற்றக் கும்பல்களின் செயற்பாடுகள், அரசியலுடன் பின்னிப் பிணைந்துள்ளதாக தெரிவித்தார். தாய்நாட்டின் வான்வெளியின் பாதுகாப்பு உங்களைச் சார்ந்தது என்பதை நாங்கள் அறிவோம்.

இது ஒரு தனித்துவமான மற்றும் ஈடுசெய்ய முடியாத பொறுப்பாகும்.

நமது தாய்நாட்டின் பாதுகாப்பிற்காகவும், மக்களின் பாதுகாப்பிற்காகவும், உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள உயர்ந்த பொறுப்பை நீங்கள் சரியாக நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையும் பிணைப்பும் எங்களுக்கு உள்ளது.

நமது கடற்பரப்பின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக்கு நீங்கள் ஒத்துழைப்பு வழங்குகிறீர்கள்.

இன்று நமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய பொறுப்புகளில், நாடென்றவகையில் நமது கடற்கரையின் எல்லைகளைக் கண்காணித்து, அதன் பாதுகாப்பை உறுதி செய்வது மிகவும் முக்கியம் என நான் நம்புகிறேன்.

ஏனென்றால், நமது கடல் எல்லை ஊடாக குறிப்பாக சட்டவிரோத குடியற்றவாசிகள், சட்டவிரோத பொருட்கள், போதைப்பொருட்கள் மற்றும் அண்மைக் காலத்தில் ஆயுதங்கள் கூட நாட்டிற்குள் எடுத்துவரப்பட்டதை நாம் கண்டிருக்கிறோம்.

எனவே, கடல் எல்லையைப் பாதுகாப்பது என்பது, தாய்நாட்டின் மற்றும் தாய்நாட்டில் வாழும் மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கையாகும்-என்றார். (அ)

## ஐ.எஸ்.ஐ.எஸ்...

பயங்கரவாத விசாரணை பிரிவு மூலம் முன்வைக்கப்பட்ட உண்மைகளைக் கருத்தில் கொண்ட நீதிவான் விசாரணையின் முன்னேற்றத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளார். (அ)

## ஜனநாயக...

என்பது தொடர்பாகவும் உள்ளூராட்சி மன்றங்களில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் உறுப்பினர்களது செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## பிள்ளைகளை...

திணைக்களத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு கிளிநொச்சி பாரதி ஸ்ரார் மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

பிரதம விருந்தினர்களாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் கௌரவ அமைச்சர் திருமதி சறோஜா சாவித்திரி போல்ராஜ், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர்,

சிறுவர்களுக்கு உடல், உள ரீதியான தண்டனைகள் வழங்கப்படக்கூடாது. சிறுவர்களை அன்பாகப் போசித்தால் சிறப்பான நாட்டை உருவாக்க முடியும். சிறுவர்களுக்கு தீங்கான எதையும் நாம் முன்னெடுக்கக்கூடாது.

இன்றைய தினம் சிறுவர் இல்லச் சிறார்கள் மிகச் சிறப்பான நிகழ்வுகளை வழங்கியிருந்தர்கள். அவர்களின் திறமைகளை எல்லோரும் காணக் கூடியதாக இருந்தது. அவர்களுக்கும் தத்தமது வீட்டிலிருந்துதான் வளர்கின் றோம் என்ற எண்ணம் மனதிலுருவாகும் வகையில் நாம் செயற்படவேண்டும்.

கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களால் பெற்றோர்களை இழந்த சிறுவர்கள் இருந்தார்கள். இன்றும் விபத்துக்களால் பெற்றோர்களை இழந்து அநாதரவான நிலைக்கு சிறு வர்கள் தள்ளப்படுகின்றார்கள். எந்த வொரு சிறுவனுக்கும் ஆதரவில்லாத நிலைமை வரக்கூடாது. அவர்களின் எதிர்காலம் பாதிக்க அனுமதிக்க முடியாது. மாகாணத் திணைக்களம் சிறுவர் இல்லங்களைக் கண்காணித்து சகல சிறுவர்களையும் அரவணைத்து அவர்களை இந்த நாட்டுக்குத் தேவை யான நற்பிரஜையாக உருவாக்கவேண் டும், என்றார் - ஆளுநர்.

வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டச் செயலர்கள் கலந்து கொண்டனர். அத்துடன் வடக்கிலுள்ள அனைத்துச் சிறுவர் இல்லங்களினதும் சிறுவர், சிறுமிகள் பங்கேற்றனர். (அ)

## தமிழின அரசாட்சி

கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியின் கிழக்குப் புறமாக அமையப் பெற்றதே மேற்குறிப்பிட்ட 'நல்லூர் சங்கிலியன் பூங்கா'. 1989 வரை செம்மணி வீதி என்பது அதற்கு வடக்காக அமைந்துள்ள தேவாலயத்துக்கு எதிராக பருத்தித்துறை வீதி வரையானதாக இருந்தது. இதற்கு தெற்காகவும், பருத்தித்துறை வீதிக்கு கிழக்காகவும் முத்திரை சந்தையும், மாநகர சபையால் வடகைக்கு கொடுக்கப்பட்ட கடைகளும் இருந்தன.

1989 இல் பருத்தித்துறை வீதியில் இருந்து தேவாலயத்துக்கு நேராகச் சென்ற செம்மணி வீதியின் பகுதி தெற்குப் பக்கமாக இருந்த தனியார் காணிகளை தெற்கு எல்லையாகக் கொண்டு தற்போதுள்ளபடி செம்மணி வீதி மாற்றப்பட்டு, நேரான வீதியாக அமைக்கப்பட்டது.

இதனால் இந்த செம்மணி வீதியின் வடக்காக செட்டியார் தோட்டம் என்று அழைக்கப்படும் காணியை வடக்கு எல்லையாகக் கொண்ட காணியாக ஒன்றிணைக்கப்பட்டது. இந்த முழுக் காணியும் மாநகர சபையின் ஆட்சியின் கீழ் இருந்து வருவது வரலாறு.

1966 ஆம் ஆண்டின் நில அளவை நாயகத்தின் வரைபடத்தின்படி அப்போதே இங்கு சந்தை இருந்தமை உறுதிப்படுத்தப்படுகிறது. சந்தைகளின் நிர்வாகம் நாடு பூராகவும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரத்திற்குட்பட்டது என்பது சட்டப்படி தெளிவானது.

இந்தப் பகுதி யாழ்ப்பாண மாநகர சபையின் 'சங்கிலி தோப்பு' என்ற பெயரிலான 05 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ளது.

என்னைப் பொறுத்தவரை நான் 1950 ஆம் ஆண்டு ஸ்ரான்லி கல்லூரி மாணவனாக முத்திரைச் சந்தையைக் கடந்து சென்ற அனுபவமும், 1960 இல் யாழ்ப்பாண மாநகர சபையின் ஓர் அலுவலராக சேர்ந்தபொழுது மேற்குறிப்பிட்ட சந்தையும், கடைகளும் மாநகர சபை நிர்வாகத்தின் கீழ் இருந்தமையும் 1978 இல் மாநகர சபையின் ஆணையாளராக இருந்த பொழுது சிறுவர் பூங்கா நிறுவிய அனுபவமும் உண்டு.

ஈழத் தமிழர் வரலாற்றில் யாழ்ப்பாண இராஜ்யத்தின் அடையாளங்களாக இந்தப் பகுதி விளங்குகிறது. யாழ்ப்பாண இராஜ்சியம் பற்றி இலங்கை யின் பிரபல வரலாற்றாசிரியரான K.M.de.Silva "A Hist ory of SriLanka" எனும் நூலில் பின்வருமாறு கூறுகிறார்.

"In the second half of the fourteenth Country, the fortunes of the Sinhalese rea -ched their nadir. True the writ of the Gam -pola kings appears to have run in Rohana as well as on the western seaboard, but Jaffna under the Ariyacakr - avatis was much the most powerful kingdom in the Island "

இத்தனை பெருமைக்குரிய மண்ணில் உள்ள ஒரேயொரு வெளி நிலமான முத்திரைச் சந்தைப் பகுதியில் மன்னன் சங்கிலியனின் பெயர் நீண்டு நிற்க வேண்டும் என்ற எண்ணத்தின்படியே, செம்மணி வீதியை இடம் மாற்றி முழுப் பகுதியையும் ஒன்றியைத்து 'சங்கிலியன் பூங்கா' 1989 இல் அமைக்கப்பட்டது. அது மாநகர நிர்வாகத்தின் கீழ் இருந்து வருகிறது.

இந்த நிலையில் நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகள் இந்த நிலம் மாநகர சபைக்கு உரித்தானது அல்ல என்ற தோரணையிலும் அது அரச காணி (State Land) என்ற தோரணை யிலும் இங்கு நல்லூர் பிரதேச செயலகம் அமைப்பதற்கு அனுமதி கோரி தங்களுக்கு சமர்ப் பித்த கோரிக்கையின் பேரில் தங்கள் தலைமையில் ஓர் அதிகாரிகள் கலந்துரையாடல் கடந்த வாரம் நடைபெற்றதாக ஊடகச் செய்தி மூலம் அறிய வந்தது. இது மிகுந்த அதிர்ச்சியை தந்தது.

இதற்கு மேலாக நல்லூர் பிரதேச செயலகத்திற்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினால் வழங்கப்பட்ட குத்தகை 25 அல்லது 30 வருடம் என்றும் ஏற்க னவே அதில் 15 அல்லது 20 வருடங் கள் சென்றுவிட்டதாகவும், நல்லூர் கோவில் நிர்வாகம் கால நீடிப்புக்கு மறுப்பு தெரிவிப்பதாகவும் இந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாக தெரிய வந்தது. இவை முழுவதுமே உண்மைக்கு புறம்பானவை.

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அதன் கட்டடம் அமைந்துள்ள 10 பரப்பு காணியை மாநகர சபையின் குத்தகையில் இருந்து நீக்கி 01.05.2005 ஆம் திகதியில் இருந்து 50 வருடக் குத்தகையை நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக் கொடுத்ததே நான்தான்.

அதன் குத்தகை நிழற்பிரதி இணைக்கப்படுகிறது. அதில் சாட்சியாக நானே ஒப்பமிட்டிருப்பதையும் காணலாம். குத்தகைக் காலம் இன்னும் 30 வருடங்கள் இருக்கையிலும், குத்தகை முடிவுக் காலத்தில் அதனை நீடிப்பதற்கான ஏற்பாடு உடன்படிக்கையிலேயே உள்ளடக்கப்பட்டு இருக்கையிலும், சங்கிலி மன்னனின் பெயரில் அமைந்த பூங்காவை இல்லாமல் அழிக்கும் நோக்கில் இந்தக் காணியை தமக்கு வழங்குமாறு கோரும் நோக்கம் புரிந்து கொள்ள முடியாததும், ஏற்றுக் கொள்ள முடியாததுமாகும். இதன் பின்னணியில் ஏதாவது மறைகரங்கள் இருக்கிறதா என்ற சந்தேகம் எழுவதும் இயல்பானதே.

இதில் எனக்கிருந்த மிகப் பெரிய ஆச்சரியம் மாநகர சபை நிர்வாகமும் தெளிவற்று குழம்பியிருந்தமையாகும். கடந்த 13.10.2025 அவர்களுடன் கலந்துரை யாடி முழு வரலாற்று விபரங்களையும் நான் தெளிவுபடுத்தியதன் அடிப்படையில் கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக தமது ஆட்சி உரித்தில் இருந்த இந்தக் காணியைச் சுற்றி சுற்று மதில் அமைத்து பூங்காவை மேம்படுத்த யாழ்.மாநகர சபை 14.10.2025 ஆம் திகதி ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதனை எனது 17.07. 2025 ஆம் திகதி கடிதம் மூலம் நான் ஏற்கனவே கோரியி ருந்தமையையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

எனவே, இந்த விடயம் தங்களது கவனத்திற்கு வந்துள்ள நிலையில், இவ்வாறான நிலை மேலும் தொங்கு நிலையில் தொடராமல் இருப்பதற்கான பொருத்தமான நடவடிக்கையை எடுத்து இந்த தமிழின அரசாட்சியின் சின்னமாக 'நல்லூர் சங்கிலியன் பூங்கா ' எனும் பெயரில் எம்மின வரலாற்றை வெளிப்படுத்திக் கொண்டு தொடர்வதற்கான திடமான நிலையை ஏற்படுத்தி உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.(அ)

## போதைப்...

நேற்று கடற்றொழில் சங்கங்கள் மற்றும் கடலட்டை சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கூட்டம், யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில், அமைச்சர் இ. சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு கடற்றொழிலாளர்களுக்காக, அரசாங்கத்தினால் கடந்த ஒரு வருட காலப்பகுதிக்குள் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பிலும், எதிர்கால இலக்குகள் தொடர்பிலும், அமைச்சர் விளக்கமளித்தார்.

அத்துடன், துறைமுகங்களை நவீனமயமாக்கல், நவீன மீன்பிடி முறை உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம், கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

கடற்றொழிலாளர்களை, சில போதைப் பொருள் மாபியாக்கள், போதைப் பொருள் கடத்தலுக்காக பகடைக்காய்களாக பயன்படுத்துவதற்கு முற்படுகின்றனர் எனவும், அந்த மாபியாக்களின் வலைகளில், கடற்றொழிலாளர்கள் சிக்கிவிடக் கூடாது எனவும், அமைச்சர் தெரிவித்தார்.

இதனால், போதைப்பொருளை முடிவு கட்டுவதற்கு, அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு தரப்பு முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்திற்கு, கடற்றொழிலாளர்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அமைச்சர் இ. சந்திரசேகர் கோரிக்கை விடுத்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இந்தியா உட்பட சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்ற இலங்கை தயார்!

## பிரதமர் ஹறிணி அறிவிப்பு



புதுடில்லி, ஒக். 19

**இலங்கையில் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நல்ல சமூகத்தையும், தொலைநோக்குடைய ஜனநாயகத்தையும் கட்டியெழுப்புதல் மற்றும் சுபீட்சமான இலங்கைக்காக இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்ற அரசாங்கம் தயாராக இருப்பதாக பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய தெரிவித்தார்.**

பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய புதுடில்லியில் நடைபெற்ற என்.டி.ரி.வி. உலக உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் தனது உரையில்-

இலங்கை அண்மையில முகம்கொடுத்த நெருக்கடியான சூழலில் இருந்து மீள்வதற்கு இலங்கை ஒரு சவாலான பயணத்தை மேற்கொள்ளவேண்டியிருந்தது, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் உள்ளடக்கிய நிர்வாகத்திற்கான மக்களின் கோரிக்கையின் பேரில் தற்போதைய அரசாங்கம் ஆட்சியை பொறுப்பேற்றமை ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவை இலங்கையின் நிதி ஒருங்கிணைப்பை அதன் வரலாற்றில் மிகப்பெரிய ஒன்றாக அங்கீகரித்துள்ளன.

பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் முன்னெப்போதும் இல்லாத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது - தற்போது இது சுமார் 10 வீதம் ஆகும். மாற்றுத்திறனாளிகள் மற்றும் மலையக சமூக உறுப்பினர்கள் உட்பட பல்வேறு தரப்பினரது குரல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கை சவால்களை எதிர்கொண்டபோதெல்லாம், அண்டை நாடாக இந்தியா வழங்கிய ஆதரவை நாங்கள் பெரிதும் மதிக்கிறோம். இலங்கையின் 2022 பொருளாதார நெருக்கடியின்போது இந்தியாவின் முக்கிய ஆதரவையும், எரிசக்தி, இணைப்பு, கல்வி, பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் தொடர்ச்சியான ஒத்துழைப்பும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை இந்தியாவின் தொலைநோக்குடன் இணைந்து இந்தியாவின் உற்பத்தி மற்றும் சேவை பெறுமான சங்கிலிகளுடன் இலங்கையின் உற்பத்திகள் மற்றும் சேவைகளை ஒருங்கிணைப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் நாம் கவனம் செலுத்துகிறோம்.

இலங்கையில் ஒரு நல்ல சமூகத்தையும், அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தொலைநோக்குடைய ஜனநாயகத்தையும் கட்டியெழுப்புவதற்கும் சுபீட்சமான இலங்கைக்காக இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கும் அரசாங்கம் தயாராக உள்ளது - என்றார். (அ)

# 1.8 மில்லியனை கடந்துள்ளது சுற்றுலாவிகள் எண்ணிக்கை!

கொழும்பு, ஒக். 19

2025 ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகைதந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1.8 மில்லியனை கடந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

புள்ளிவிவரங்களின்படி, இந்த மாதத்தின் முதல் 15 நாட்களில் மாத்திரம் 75 ஆயிரத்து 657 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த ஆண்டில் இதுவரை நாட்டுக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 18 இலட்சத்து 1,151 ஆக அதிகரித்துள்ளது.

அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளதுடன் குறித்த காலப் பகுதியில் சுமார் 4 இலட்சம் இந்திய சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இதுவரை 3 இலட்சத்து 96ஆயிரத்து 274 இந்திய சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிரான்ஸில் இருந்து 90 ஆயிரத்து 250 பேரும் , ஆஸ்திரேலியாவில் இருந்து 81 ஆயிரத்து 40 பேரும் நெதர்லாந்தில் இருந்து 53 ஆயிரத்து 922 பேரும் அமெரிக்காவில் இருந்து 50 ஆயிரத்து 27 பேரும் இந்த ஆண்டு இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை இத்தாலியில் இருந்து 39ஆயிரத்து 932 பேரும் , கனடாவில் இருந்து 37ஆயிரத்தது 606 பேரும் ஸ்பெயினில் இருந்து 36ஆயிரத்து 430 பேரும் மற்றும் போலந்தில் இருந்து 36ஆயிரத்து 389 பேரும், இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த ஆண்டு, இரண்டு மில்லியனுக்கும் அதிகமான (2,053,465) சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இலங்கைக்கு அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இறுதியாக 2018 ஆம் ஆண்டில் வருகை தந்திருந்தனர்.

குறித்த ஆண்டில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான (2,333,796) சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

# செவ்வந்தியின் வங்கிக் கணக்கில் பணம் இல்லை

கொழும்பு, ஒக். 19

கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கின் முக்கிய சந்தேகநபர்களில் ஒருவரான இஷாரா செவ்வந்தியிடம், மேற்கொண்ட விசாரணைகளில் வெளிவந்துள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மேலும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், இஷாராவின் வங்கிக் கணக்குப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கில் பணம் இல்லை என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும், அவருக்கு வேறு ஏதேனும் வங்கிக் கணக்குகள் உள்ளதா என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகளும் இடம்பெற்று வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், தனக்கு மோட்டார் சைக்கிள் மற்றும் கார் போன்ற வாகனங்களை செலுத்த முடியும் என்பதை, இஷாரா செவ்வந்தி கொழும்பு குற்றப்பிரிவில் ஒப்புக்கொண்டுள்ளார். (அ)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் போதைப்பொருளுடன் கைது!

கொழும்பு, ஒக். 19

நான்கு குற்றச்சாட்டுகளின் கீழ் பிடியாணை உத்தரவு பிறப் பிக்கப்பட்ட சந்தேகநபர் ஒருவர் ஹெரோயினுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலநறுவை - மன்னம் பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரிலேயே மன்னம் பிட்டி - மஹ வெவ பிரதேசத்தில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டார். கைதானாவர், அதே பிர தேசத்தை சேர்ந்த 32 வயது நபராவார். அவரிடமிருந்து 2 ஆயிரத்து 900 மில்லி கிராம் ஹெரோயின் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# போதைப்பொருளுக்கு அடிமையானோருக்கு தொழிற்பயிற்சி வழங்குவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஒக். 19

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களின் புனர் வாழ்வுத் திட்டம் நிறைவடைந்ததும், அவர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிக்கப்பட வுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித் துள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர், ஊடகங் களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச மற்றும் தனியார் துறைகளில் போதைக்கு அடி மையானவர்களை பணிகளுக்கு அமர்த்துவதற்கான பொறிமுறையை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. புனர்வாழ்வு நிறைவடைந்து வீடு திரும்பு பவர்கள் மீண்டும் போதைப் பொருட்களை உட்கொள்ள ஆரம்பிப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இந்த சூழ் நிலையை நிவர்த்தி செய்யும் நோக்கில், புதிய திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். இந்த செயற்பாடு போதைப் பொருட்களுக்கான தேவை யைக் கட்டுப்படுத்தும் அதேநேரம், போதைப் பொருள் விநியோகச் சங்கிலியைக் கட்டுப் படுத்தும் எனவும் நம்புகிறோம் - என்றார். (அ)

# இலங்கை உணவுக்கு உலகளவில் பாராட்டு

கொழும்பு, ஒக். 19

உலகில் உணவுக்கு சிறந்த நாடுகளின் பட்டியலில் இலங்கையும் தனது பெயரை நிலை நாட்டியுள்ளது.

2025 வாசகர்களின் தேர்வு விருதுகளின் அடிப்படையில் உலகில் உணவுக்கு சிறந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை 7 ஆவது இடத்தில் உள்ளது.

95.56 புள்ளிகளை இலங்கை பெற்றுள்ளது.

98.33 புள்ளிகளுடன் முதல் இடத்தில் தாய்லாந்தும் 96.92 புள்ளிகளுடன் இத்தாலி இரண்டாவது இடத்திலும் 96.77 புள்ளிகளுடன் ஜப்பான் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

குறித்த தரப்படுத்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு நாடும் மக்களிடையே பிரபலமாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

உணவுகளுக்கான மசாலா, நிறம் மற்றும் தேங்காய் ஆகியவற்றின் அற்புதமான கலவையால் இலங்கை குறித்த இடத்தைப் பெற்றுள்ளதாகத் தரப்படுத்தல் குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் உணவு சுவையை அறிந்து கொள்ள பெட்டா சந்தை ஓர் சிறந்த இடம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் உணவுகளான கொத்து ரொட்டி, அப்பம் போன்றவை சிறந்த தெரிவுகளாக பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இலங்கை உணவு வகைகளில் பெரும்பாலானவை வீட்டு சமையல் மரபுகளை மையமாகக் கொண்டுள்ளன, மேலும் தலைமுறை குடும்ப சமையல் குறிப்புகளின் இந்த அன்பான தொடுதல்தான் இங்குள்ள உணவை உண்மையில் சிறப்புறச் செய்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# செவ்வந்திக்கு அடைக்கலம்: பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

கொழும்பு, ஒக். 19

இஷாரா செவ்வந்திக்கு அடைக்கலம் கொடுத்தார் என்று கூறப்படும் குற்றச்சாட்டின் கீழ் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் கான்ஸ்டபிள், கான்ஸ்டபிளின் மனைவியின் தாய் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுவைச் சேர்ந்தவரென கருதப்படும் "மாத்தறை ஷான்" என்பவரின் நெருங்கிய சகா ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் ஏனைய இருவர், இஷாரா செவ்வந்திக்கு அடைக்கலம் கொடுத்து உதவினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

# வெளிநாடு பயணிப்போருக்கு புதிய நடைமுறை அறிமுகம்!

கொழும்பு, ஒக். 18

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து பயணிப்பவர்கள் தாம் பயணிக்கும் விமானம் புறப்படுவதற்கு 4 மணி நேரத்துக்கு முன்பாக விமான நிலையத்துக்கு வருகை தரவேண்டும் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் இந்த நடைமுறை நடைமுறைக்கு வந்துள்ளது.

பயணிகளுக்கான சேவைகளை மேம்படுத்துவதற்கும் விமான நிலையத்தினுள் பயணிகள் போக்குவரத்தைச் சீராகச் மேற்கொள்வதற்கும் இந்த நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org